ஆகஸ்ட் மாத பதிப்பு

# வெற்றி ADDA247 தமிழ்நாடு மாதாந்திர நடப்பு நிகழ்வுகள் தமிழில் 2022 PDF

**TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 3 & 4, TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB மேலும் பல**

காஞ்சிபுரம் அருகே பரந்தூரில் அமைகிறது சென்னையின் 2 - ஆவது விமான நிலையம்

தமிழ் நாட்டின் ஈர நிலங்கள் (இராம்சர் பட்டியலில்)

சென்னையில் வீர மங்கை வேலு நாச்சியார் நாட்டிய நாடகம் - முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

டெல்லியில் பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் பரிசாக வழங்கிய 9 நெல், தானியங்களின் சிறப்பு அம்சம்

மத்திய தர வரிசை பட்டியல் 46 வது இடத்தில் தமிழகம்







- adda 247 app ல் தமிழ்நாடு மாநில தேர்வு
- பிரிவில் பயின்றிருங்கள்
- கிளிக் செய்க
- தேர்ந்திடு வென்றிடு

Tamilnadu Monthly Current Affairs PDF in Tamil | August 2022

**காஞ்சிபுரம் அருகே பரந்தூரில் அமைகிறது சென்னையின் 2 - ஆவது விமான நிலையம்:**

- காஞ்சிபுரம் அருகே பரந்தூரில் சென்னையின் இரண்டாவது விமான நிலையம் அமையவுள்ளது.
- உள் நாட்டு விமான போக்குவரத்து அமைச்சகம் அனுமதி அளித்ததும் அதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கும் என்று மத்திய இணை அமைச்சர் வி கே சிங் தெரிவித்தார்.
- மேலும், உடான் திட்டத்தின் கீழ் மண்டலங்களை இணைக்கும் வகையில் தமிழ் நாட்டில் நெய்வேலி, தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் வேலூர் ஆகிய 4 விமான நிலையங்களை புதுப்பித்து தரமுயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.
- பரந்தூரில் விமான நிலையம் அமைக்க ஏற்கெனவே 4,971 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.




- சுமார் 160 ஆயிரம் கோடியில் விமான நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- சென்னையில் இருந்து 73 கிமீ தொலைவில் அமைந்துள்ள பரந்தூருக்கு 2 மணி நேரத்தில் சென்று விடலாம்.
- காஞ்சிபுரத்தில் இருந்து 15 கிமீ சென்னை - பெங்களூரு 6 வழிச் சாலையில் இருந்து 10 கி.மீ. தொலைவில் பரந்தூர் அமைந்துள்ளது.

**ஜூலை GST வருவாய் 11.49 லட்சம் கோடி: தமிழ் நாட்டில் 18,449 கோடி வசூல்**

- கடந்த ஜூலை மாதத்தில் ஜிஎஸ்டி மூலம் 1,48,995 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளதாக ஒன்றிய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- கடந்த ஆண்டு ஜூலை மாத ஜிஎஸ்டி வரியை விட இந்த ஆண்டு 28 சதவீதம் அதிகரித்துள்ளது.
- ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்டதில் இருந்து கிடைத்த மாத வருவாயில் இது இரண்டாவது அதிக தொகை ஆகும்.
- நாட்டில் கடந்த ஜூலை மாத சரக்கு மற்றும் சேவை வரியாக (GST) ₹1,48,995 கோடி வசூலாகியுள்ளது.
- இதில் தமிழ் நாட்டில் ₹8,449 கோடி GST வசூலானது.

- இது தொடர்பாக நடுவண் நிதியமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: கடந்த 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் GST அமல்படுத்தப்பட்ட நிலையில், இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் GST வசூல் புதிய உச்சத்தை தொட்டது.
- அந்த மாதம் ₹1,67,540 கோடி GST வசூலானது. இது GST அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து வசூலான இரண்டாவது அதிகபட்ச வருவாய் ஆகும். கடந்த ஆண்டு ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு ஜூலை மாதம் சரக்குகள் இறக்குமதி மூலம் கிடைத்த வருவாய் 48 சதவீதம் அதிகமாகவும், உள் நாட்டு பரிவர்த்தனை (சேவைகள் இறக்குமதி உள்பட) மூலம் கிடைத்த வருவாய் 22 சதவீதம் அதிகமாகவும் இருந்தன.
- GST வசூலில் நடுவண் GST, மாநில GST, ஒருங்கிணைந்த GST, செஸ் வரி ஆகியவை அடங்கும்.
- அதன் விவரம் பட்டியலில் வருமாறு: ஜூலை GST ₹1,48,995 கோடி; நடுவண்
- இதில் மத்திய ஜிஎஸ்டி ரூ. 25,751 கோடி, மாநில ஜிஎஸ்டி ரூ. 32,807 கோடி, ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி ரூ. 79,518 கோடி, செஸ் வரி ரூ. 10,920 கோடி ஆகும். ஜிஎஸ்டி வசூல் 1.4 லட்சம் தாண்டுவது 6 வது முறை.
- கடந்த மார்ச் மாதத்தில் இருந்து தொடர்ந்து 5 வது முறையாக ரூ.1.4 லட்சதை தாண்டியுள்ளது. தொடர்ந்து 13 மாதமாக ஜிஎஸ்டி வசூல் ரூ. ஒரு லட்சம் கோடியை கடந்துள்ளது.
- மகராஷ்டிரா மாநிலம் 22,129 கோடி ரூபாயுடன் முதலிடத்தில் உள்ளது. 9,795 கோடி ரூபாயுடன் கர்நாடகா, 2 ம் இடத்திலும், 9,183 கோடியுடன் குஜராத் 3 ம் இடத்திலும், 8,449 கோடியுடன் தமிழ் நாடு 4 ம் இடத்திலும், 7,074 கோடி ரூபாயுடன் உத்தரப் பிரதேசம் 5 ம் இடத்திலும், 6,791 கோடி ரூபாயுடன் அரியானா 6 ம் இடத்திலும் உள்ளது.

**தெற்கு சூடானிற்கான ஐ.நா. வின் புதிய படை தளபதியாக தமிழகத்தைச் சேர்ந்த மோகன் சுப்ரமணியம் நியமனம்:**

- ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர், தெற்கு சூடான் நாட்டிற்கான அமைதியை நிலை நாட்டுவதற்காக புதிய படை தளபதியாக இந்தியாவின், தமிழகத்தை சேர்ந்த மோகன் சுப்ரமணியத்தை நியமித்துள்ளார்.
- தற்போது மோகன் சுப்ரமணியம் நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரியின் கமாண்டன்ட் ஆக உள்ளார்.

Adda247 தமிழ்

**கோத்தகிரி 'லாங் வுட்' சோலைக்கு கிடைத்தது சர்வதேச அங்கீகாரம்:**

- நீலகிரி மாவட்டம், கோத்தகிரி நகர மையப் பகுதியில், 250 ஏக்கர் பரப்பில் லாங்வுட் சோலை அமைந்துள்ளது.
- இச்சோலை, 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்கிறது.
- தவிர, 35 மர வகைகள், 12 கொடிகள், ஆறு ஆர்க்கிட்டுகள், 105 பறவையினங்கள், 30 விலங்கினகள் மற்றும் பல அரிய தாவரங்கள்; பூஞ்சைகளின் புகலிடமாக உள்ளது. இதற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது.
- நம் மாநிலத்தின் சிறந்த வனமாக உள்ள லாங்வுட் சோலைக்கு, 'குயின்ஸ் கெனோபி' எனப்படும் இங்கிலாந்து நாட்டின், 'உலகளாவிய பசுமை நிழற்குடை' என்ற சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது.

**கீழடி அருகே 6 அடுக்கு உறை கிணறு கண்டுபிடிப்பு:**

- சிவ கங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் 8 ம் கட்ட அகழாய்வு பணிகள் நடந்து வருகின்றன.
- கீழடி மட்டுமின்றி, அதன் அருகே உள்ள கொந்தகை, அகரம் ஆகிய இடங்களிலும் அகழாய்வு நடந்து வருகிறது.
- அகரத்தில் 6 குழிகள் தோண்டப்பட்டு ஆய்வு நடக்கிறது. இங்கு பழங்கால பானை ஓடுகள், சில்லுகள், பாசி மணிகள் கிடைத்து வருகின்றன.
- இங்குள்ள குழி ஒன்றில் சில நாட்களுக்கு முன் உறை கிணற்றின் வாய்ப் பகுதி மட்டும் தென்பட்டது. அங்கு தொடர்ந்து தோண்டும் பணி நடந்த நிலையில், தற்போது ஆறடுக்கு உறை கிணறு கண்டறியப்பட்டுள்ளது.
- அங்கு முன்பு நடந்த அகழாய்வில் 33 அடுக்குகள் கொண்ட மெகா உறை கிணறு கண்டறியப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**தமிழ் நாட்டில் மேலும் 6 ஈர நிலங்களுக்கு ராம்சர் விருது:**

- ஈர நிலங்களின் பயன்பாடு மற்றும் அவற்றின் பாதுகாப்பிற்காக சர்வதேச அளவில் ஏற்படுத்தப்பட்ட ஒரு உடன்படிக்கை தான் ராம்சர் உடன்படிக்கை.
- 1971 ஆம் ஆண்டில் ஈரானில் உள்ள ராம்சர் நகரத்தில் இதற்கான உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டதால் அந்த நகரத்தின் பெயரில் இந்த அங்கீகாரம் வழங்கப்படுகிறது.
- சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்ற ஈர நிலங்களை அடையாளம் கண்டு, ராம்சர் அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

- தமிழ் நாட்டில் கூந்தன் குளம் பறவைகள் காப்பகம், மன்னார் வளைகுடா கடல் சார் உயிர்க் கோளகக் காப்பகம், வேம்பனூர், வெள்ளோடை பறவைகள் காப்பகம், வேடந்தாங்கல் பறவைகள் காப்பகம் & உதய மார்த்தாண்டம் பறவைகள் காப்பகம் ஆகிய 6 ஈர நிலங்களுக்கு ராம்சர் ஈர நில அங்கீகாரம் கிடைத்துள்ளது.

**ஈர நிலங்கள் - இயற்கை சுத்திகரிப்பு நிலையங்கள்:**

- நில வாழ் சூழல் மண்டலத்துக்கும், நீர் வாழ் சூழல் மண்டலத்துக்கும் இடையே அமைந்துள்ள ஈர நிலங்கள் இயற்கை சுத்திகரிப்பு நிலையங்களாகத் திகழ்கின்றன. இவை உலகின் பல்லுயிர்த் தன்மையைப் பாதுகாப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.
- உலகின் மொத்தப் பரப்பளவில் 6 சதவீதமே ஈர நிலங்கள் உள்ளன. 40% தாவர & விலங்கின உயிரினங்களுக்கு இவை இருப்பிடமாக உள்ளன.
- காடுகள் பெருமளவில் கார்பன் - டை - ஆக்சைடு வாயுவை உள்ளிழுத்து ஆக்சிஜனை வெளியேற்றி புவியின் நுரையீரலாகச் செயல்படுகின்றன.
- அதே போன்று, நீரில் விரவியுள்ள வண்டல் படிவுகள், திண்ம மாசுக்களை வடிகட்டி சுத்திகரிக்கும் ஈர நிலங்களைப் புவியின் சிறுநீரகங்கள் (இயற்கை சுத்திகரிப்பு நிலையங்கள்) எனலாம்.
- வெள்ளப் பெருக்கின் போது நுரைப் பஞ்சு போன்று செயல்பட்டு அதிகப்படியான வெள்ள நீரை உறிஞ்சி பாதிப்பைக் குறைப்பதில் ஈர நிலங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.
- ஐநா கருத்துப்படி, கடந்த 50 ஆண்டுகளில் 35% ஈர நிலங்கள் அழிந்துள்ளன. ஈர நிலங்களைப் பாதுகாக்க கடந்த 1971 - ஆம் ஆண்டு ஈரானின் இராம்சர் நகரில் ஒப்பந்தம் கையொப்பமானது.
- இதில் 172 நாடுகள் இராம்சர் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தில் கடந்த 1982 - ஆம் ஆண்டு பிப்.1 - ஆம் தேதி இந்தியா கையொப்பமிட்டது.
- இராம்சர் ஒப்பந்தப் பட்டியலில் 9 தகுதிகளின் அடிப்படையில் சேர்க்கப்படும் ஈர நிலங்கள் சர்வதேச அளவில் அங்கீகாரம் பெறுகின்றன.
- உலகில் இதுவரை 2,455 ஈர நிலங்கள் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.



- இந்தியாவின் மொத்தப் பரப்பில் ஈர நிலங்களின் பரவல் 4 .6 சதவீதமாகும். மேற்கு வங்கத்தின் சுந்தர வனக் காடுகள் (பரப்பு 4,230 ச.கி.மீ.) இந்தியாவின் மிகப் பெரிய ஈர நிலப் பகுதியாகும்.
- தமிழகத்திலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம், கரிக்கிலி பறவைகள் சரணாலயம், பிச்சாவரம் அலையாத்திக் காடுகள், மிஸோரத்தின் பாலா சதுப்பு நிலம், மத்திய பிரதேசத்தின் சக்யாசாகர் ஏரி ஆகிய 6 ஈர நிலங்கள் இராம்சர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக கடந்த ஜூலை 26 - ஆம் தேதி அறிவிக்கப்பட்டது.
- இதைத் தொடர்ந்து, கடந்த ஆக.3 - ஆம் தேதி கோவாவின் நந்தா ஏரி, கர்நாடகத்தின் ரங்கண்ணா திட்டு பறவைகள் சரணாலயம், மத்திய பிரதேசத்தின் சிர்பூர் ஏரி, ஒடிஸா மகாந்தியின் சட்கோசியா பள்ளத்தாக்கு மற்றும் தமிழகத்திலிருந்து 6 ஈர நிலங்களும் இப்பட்டியலில் இடம் பெற்றதன் மூலம் இந்தியாவில் இராம்சர் அங்கீகாரம் பெற்ற சதுப்பு நிலங்களின் எண்ணிக்கை 64 - ஆக உயர்ந்துள்ளது.
- தெற்கு ஆசிய நாடுகளில் அதிக அளவிலான இராம்சர் ஈர நிலங்களை இந்தியா பெற்றுள்ளது.
- ஈர நிலங்களின் வகைகள்
- இயற்கையாக உருவானவை
- ஆறுகள்
- சதுப்பு நிலங்கள்
- ஏரிகள்
- அலையாத்திக் காடுகள்
- குளங்கள்
- பவளப் பாறைகள்
- மனிதரால் உருவாக்கப்பட்டவை
- நீர்த் தேக்கங்கள்
- உப்பளம்
- விளை நிலங்கள்
- மீன் வளர்ப்புக் குளங்கள்
- மாநிலங்கள் ஈர நிலங்களின் பரப்பு (ஹெக்டேர்)
- குஜராத் - 34,74,950
- ஆந்திர பிரதேசம் - 14,47,133
- உத்தர பிரதேசம் - 12,42,530
- மேற்கு வங்கம் - 11,07,097
- மகாராஷ்டிரம் - 10,14,522
- தமிழ்நாடு - 9,02,534

**சிறப்பம்சங்கள்:**

1. வடிகட்டியாக செயல்பட்டு நீரைச் சுத்திகரித்தல்
2. வட மற்றும் குறைவான மழைப் பொழிவு காலங்களில் நீர்ப் பாதுகாப்பை உறுதி செய்தல்
3. நீர் சுழற்சி, கார்பன் சுழற்சி மற்றும் நைட்ரஜன் சுழற்சியைத் தொடர்ந்து இயங்கச் செய்தல்
4. பிற சூழல் மண்டலங்களைக் காட்டிலும் ஈர நில சூழல் மண்டலங்கள் கூடுதல் மதிப்புடையன

5. பல்லுயிர்த் தன்மையைப் பாதுகாத்தல்
6. உணவுச் சங்கிலித் தொடரை உறுதி செய்தல்
7. கால நிலை மாற்றத்தால் ஏற்படும் இடர்ப் பாடுகளைத் தணித்தல்
8. உள்ளூர் சமூகங்களுக்கு பொருளாதார மேம்பாட்டுக்கான வாய்ப்பை வழங்குதல்
9. வலசை பறவைகளுக்கு தங்கும் விடுதிகளாகச் செயல்படுதல்
10. மண்ணரிப்பைத் தடுத்தல்
11. புயல் மற்றும் சுனாமி போன்ற கடலோரப் பேரிடர் பாதிப்பை தணிப்பதில் அலையாத்திக் காடுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

**எதிர் கொள்ளும் அச்சுறுத்தல்கள்:**

1. கழிவு நீர் வெளியேற்றத்தால் ஏற்படும் மாசுபாடு
2. அயல் இனத் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பரவல்
3. ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள்
4. கட்டட இடிபாட்டு கழிவுகள் மற்றும் குப்பைகள் கொட்டப்படுதல்
5. ஈர நிலங்களில் வாழும் உயிரினங்களை வேட்டையாடுதல்
6. நீர் நிலையின் மேற்பரப்பில் பாசி படர்தல்
7. அதிகளவிலான மீன் பிடிப்பு
8. கடல் நீரின் வெப்ப நிலை அதிகரிப்பால் பவளப் பாறைகள் சிதைவடைதல்

**தமிழ் நாட்டின் ஈர நிலங்கள் (இராம்சர் பட்டியலில்):**

1. கோடியக்கரை பறவைகள் சரணாலயம், நாகப்பட்டினம் - 38,500 ஹெக்டேர்
2. பள்ளிக்கரணை சதுப்புநிலம், சென்னை - 1,248 ஹெக்டேர்
3. கரிக்கிலி பறவைகள் சரணாலயம், செங்கல்பட்டு - 58 ஹெக்டேர்
4. பிச்சாவரம் அலையாத்திக் காடுகள், கடலூர் - 1,479 ஹெக்டேர்
5. கூந்தன் குளம் பறவைகள் சரணாலயம், திருநெல்வேலி - 72 ஹெக்டேர்
6. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், செங்கல்பட்டு - 40 ஹெக்டேர்
7. வேம்பனூர் ஈரநிலம், கன்னியாகுமரி - 20 ஹெக்டேர்
8. வெள்ளோடு பறவைகள் சரணாலயம், ஈரோடு - 77 ஹெக்டேர்
9. உதய மார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம், திருவாரூர் - 44 ஹெக்டேர்
10. மன்னார் வளைகுடா உயிர்க் கோளக் காப்பகம், இராமநாதபுரம் - 52, 672 ஹெக்டேர்

**செஸ் ஒலிம்பியாட் நிறைவு: 17 இந்தியர்களுக்கு பதக்கம்:**

- மாமல்லபுரத்தில் நடந்த 44 ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் மொத்தம் 17 இந்தியர்கள் பதக்கம் வென்றுள்ளனர்.
- இதில் 2 பேருக்கு தனி நபர் தங்கம், ஒரு வெள்ளி, தலா 4 வெண்கலம், அணிகள் சார்பில் 10 பேருக்கு வெண்கலம் என 17 பதக்கங்கள் அடங்கும்.
- தமிழ் நாடு அரசு, சர்வதேச செஸ் கூட்டமைப்பு (FIDE), அகில இந்திய செஸ் கூட்டமைப்பு (AICFI) சார்பில் ₹100 கோடி செலவில் செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் மாமல்லபுரம் போர் பாயிண்ட் ஷெரட்டன் ஹோட்டலில் கடந்த ஜூலை 28 ஆம் தேதி தொடங்கியது.
- ஓபன் பிரிவில் 187, மகளிர் பிரிவில் 162 நாடுகளைச் சேர்ந்த ஈராயிரத்துக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.
- மொத்தம் 11 சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன. நிறைவு நாளான செவ்வாய்க்கிழமை 11 - ஆம் சுற்று ஆட்டங்கள் பரபரப்பாக நடைபெற்றன. ஓபன் பிரிவில் உஸ்பெகிஸ்தான், ஆர்மீனியா, இந்திய பி அணிகள் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் வென்றன.
- மகளிர் பிரிவில் உக்ரைன், ஜார்ஜியா, இந்திய ஏ அணிகள் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் வென்றனர்.
- இந்திய பி, ஏ அணிகளுக்கு வெண்கலம்:
- இந்திய பி அணியில் அதிபன், குகேஷ், பிரக்ஞானந்தா, நிஹால் சரீன், ரௌனக் சத்வானி இடம் பெற்றிருந்தனர். இந்திய மகளிர் ஏ அணியில் ஹரிகா துரோணவல்லி, கொனேரு ஹம்பி, ஆர் வைஷாலி, பக்தி குல்கர்னி, தான்யா சச்தேவ் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் அனைவருக்கும் வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.
- குகேஷ், நிஹால் சரீனுக்கு தங்கம்:
- விளையாட்டு வீரர்களின் வெற்றி, ரேட்டிங் அடிப்படையில் வழங்கப்படும் தனி நபர் பதக்கங்களில் இந்திய இளம் வீரர்கள் டி குகேஷ், நிஹால் சரீன் ஆகியோர் தங்கம் வென்றனர்.
- ஏ அணி வீரர் அர்ஜுன் எரிகைசி வெள்ளியும் பி அணி வீரர் பிரக்ஞானந்தா வெண்கலமும் வென்றனர்.
- மகளிர் பிரிவில் தான்யா சச்தேவ், திவ்யா தேஷ்முக், ஆர் வைஷாலி வெண்கலம் வென்றனர்.

**125 கோடியில் ஒலிம்பிக் தங்க வேட்டை திட்டம்: முதல்வர் மு. க ஸ்டாலின் அறிவிப்பு:**

- ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்லும் வகையில் விளையாட்டு வீரர்களை உருவாக்க, ₹25 கோடியில் ஒலிம்பிக் தங்க வேட்டை திட்டம் செயல்படுத்தப்படும் என்று முதல்வர் மு. க ஸ்டாலின் அறிவித்தார்.
- ஒலிம்பிக் தங்க வேட்டை: தமிழ் நாட்டில் உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்கள், ஒலிம்பிக் பதக்கங்கள் வெல்வோரை உருவாக்கும் பொருட்டு "ஒலிம்பிக் தங்க வேட்டை" என்ற திட்டம் ₹25 கோடியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
- இதன் படி, ஐம்பது விளையாட்டு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு, நான்கு ஆண்டுகளில் அவர்களின் திறன்களை மேம்படுத்த ₹60 கோடி செலவு செய்யப்படும்.




- இந்தியாவின் முதல் சர்வதேச மாஸ்டர் ஆரோனுக்கு கௌரவம்:
- செஸ் ஒலிம்பியாட் நிறைவு விழாவில், இந்தியாவின் முதல் செஸ் சர்வதேச மாஸ்டர் மானுவல் ஆரோன் கௌரவிக்கப்பட்டார்.

**44 ஆவது செஸ் ஒலிம்பியாட் நிறைவு: ஹங்கேரியிடம் FIDE கொடி ஒப்படைப்பு:**

- சர்வதேச செஸ் கூட்டமைப்பின் கொள்கை விளக்கப் பாடலுடன் 44 ஆவது செஸ் ஒலிம்பியாட் விழா நிறைவு பெற்றது.
- அதனைத் தொடர்ந்து செஸ் போட்டியின் அடையாளமாக கொண்டு வரப்பட்ட தீப்பந்தம் அணைக்கப்பட்டது.
- முன்னதாக சர்வதேச செஸ் கூட்டமைப்பின் கொடி ஹங்கேரி நாட்டிடம் ஒப்படைக்கப்பட்டது.
- 45 ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி ஹங்கேரியில் நடைபெறவுள்ளது.

**75 ஆவது கிராண்ட் மாஸ்டர் சென்னையைச் சேர்ந்த செஸ் வீரர் V பிரணவ்:**

- சென்னையைச் சேர்ந்த செஸ் வீரர் V பிரணவ் ருமேனியாவில் நடந்த போட்டியில் வெற்றி பெற்று இந்தியாவின் 75 ஆவது கிராண்ட் மாஸ்டர் ஆனார்.

- 15 வயதான அவர், ருமேனியாவில் உள்ள பையா மாரில் நடந்த லிம்பீடியா ஓபனில் தனது மூன்றாவது மற்றும் இறுதி GM நெறியைப் பெற்று கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை வென்றார்.
- அவர் 9 சுற்றுகளிலிருந்து ஏழு புள்ளிகள் பெற்று போட்டியை நிறைவு செய்தார். பிரணவ், தமிழ் நாட்டின் இருபத்தேழாவது கிராண்ட் மாஸ்டர் ஆவார்.

**என்.வி. ரமணா பரிந்துரை உச்ச நீதி மன்ற தலைமை நீதிபதியாகிறார் யு.யு. லலித்:**

- உச்ச நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி பதவி, பணி மூப்பு அடிப்படையில் வழங்கப்படுகிறது. இதில் பொறுப்பில் உள்ள தலைமை நீதிபதி, ஓய்வு பெறுவதற்கு முன்பாக தனக்கு அடுத்தப்படியாக யாரை தலைமை நீதிபதியாக நியமிக்க வேண்டும் என்பதை குறிப்பிட்டு ஒன்றிய அரசுக்கு பரிந்துரை செய்வது நடைமுறை.
- தற்போது, தலைமை நீதிபதியாக இருக்கும் என்.வி. ரமணா வரும் 27 ம் தேதியுடன் ஓய்வு பெறுகிறார்.
- இதையடுத்து, புதிய தலைமை நீதிபதியாக யாரை நியமிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்யும் படி ரமணாவுக்கு ஒன்றிய அரசு கடிதம் அனுப்பியது.
- இந்நிலையில், உச்ச நீதிமன்ற கொலிஜியத்தின் கூட்டம் நடைபெற்றது. அதில் எடுக்கப்பட்ட முடிவின் படி, உச்ச நீதி மன்றத்தின் தற்போதைய மூத்த நீதிபதியும், ரமணாவுக்கு அடுத்தப்படியாக 2 வது இடத்தில் இருப்பவருமான நீதிபதி யு.யு. லலித்தை அடுத்த தலைமை நீதிபதியாக நியமிக்கும் படி தலைமை நீதிபதி என்.வி. ரமணா பரிந்துரை செய்துள்ளார்.
- இதற்கு ஒன்றிய சட்டத் துறையும், ஜனாதிபதியும் ஒப்புதல் வழங்கியதும், உச்ச நீதிமன்றத்தின் 49 வது தலைமை நீதிபதியாக வரும் 27 ம் தேதி யு.யு. லலித் பதவியேற்க உள்ளார்.

**தகை சால் தமிழர் 2021:**

- தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், 2021 - ஆம் ஆண்டு முதல் "தகைசால் தமிழர்" என்ற பெயரில் புதிய விருது தமிழ்நாடு அரசு வழங்கிவருகிறது.
- இந்த ஆண்டிற்கான விருதாளரைத் தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் கலந்தாலோசனைக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ் நாடு முதல்வர் தலைமையில் நடைபெற்றது.

- கூட்டத்தில், இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, விடுதலைப் போராட்ட வீரராகத் தன் இளம் வயதைச் சிறைச் சாலையிலும், தலை மறைவு வாழ்க்கையிலும் கழித்தவரும் ஏழை எளிய மக்களுக்காகக் குரல் கொடுத்து, சமூக நல்லிணக்கத்தினையும், சுற்றுச் சூழலையும் காத்திடத் தொடர்ந்து பாடுபட்டு வருவதுடன், சிறந்த தன்னலமற்ற அரசியல்வாதியாகவும் பணியாற்றி, தமிழ் நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பை அளித்த தமிழருமான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர். நல்ல கண்ணுவுக்கு 2022 ஆம் ஆண்டிற்கான "தகை சால் தமிழர் விருது" வழங்க தேர்வுக் குழுவினரால் ஒரு மனதாக முடிவு செய்யப்பட்டது.
- "தகை சால் தமிழர்" விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல கண்ணுவுக்கு, ரூ. 10 லட்சத்துக்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழும், வரும் சுதந்திர நாள் விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்குவார்.

**சி எஸ் ஐ ஆர் தலைமை இயக்குநராக தமிழக பெண் விஞ்ஞானி கலைச் செல்வி நியமனம்:**

- காரைக்குடியில் உள்ள சி எஸ் ஐ ஆர் - மத்திய எலக்ட்ரோ கெமிக்கல் ஆராய்ச்சி மையத்தின் இயக்குநராக இருப்பவர் ந. கலைச் செல்வி. லித்தியம் அயர்ன் பேட்டரி துறையில் இவர் பல பங்களிப்புகளை அளித்துள்ளார்.
- சி எஸ் ஐ ஆர் அமைப்பின் தலைமை இயக்குநராக இருந்த சேகர் மாண்டே, கடந்த ஏப்ரலில் ஓய்வு பெற்றார். இதையடுத்து தலைமைப் பொறுப்பை பயோ டெக்னாலஜி துறையின் செயலாளர் ராஜேஷ் கோகலே, கூடுதலாக கவனித்து வந்தார்.
- இந்நிலையில், சி எஸ் ஐ ஆர் தலைமை இயக்குநராக ந. கலைச் செல்வி நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் 2 ஆண்டுகள் இந்தப் பதவியில் இருப்பார் என மத்தியப் பணியாளர் அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது தவிர அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி துறையின் செயலாளர் பொறுப்பையும் இவர் கவனிப்பார்.

**கேலோ இந்தியா திட்டம் - தமிழகத்துக்கு ரூ.33 கோட, அதிக பட்சமாக குஜராத்துக்கு ரூ.608.37 கோடி நிதி ஒதுக்கீடு:**

- கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் இந்தியாவில் உள்ள மாநிலங்களின் விளையாட்டு உள் கட்டமைப்பு மேம்பாட்டிற்காக மத்திய விளையாட்டு துறை நிதி ஒதுக்கியுள்ளது.
- சுமார் 33 மாநிலங்களுக்கு 2754.28 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- அந்தமான் நிக்கோபார் தீவுகள் - 7.23 கோடி, ஆந்திரா - 33.80 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- இதே போல் அருணாச்சல பிரதேசம் - 183.72 கோடி, அசாம் - 47.68 கோடி, பீகார் - 50.83 கோடி, சத்தீஸ்கர் - 20.65 கோடி, டெல்லி - 89.36 கோடி, கோவா - 19.10 கோடி, குஜராத் - 608.37 கோடி, ஹரியானா - 88.89 கோடி,
- ஹிமாச்சல பிரதேசம் - 38.10 கோடி, ஜம்மு காஷ்மீர் - 27.89 கோடி, ஜார்கண்ட் - 10.38 கோடி, கர்நாடகா - 128.52 கோடி, கேரளா - 62.74 கோடி, லடாக் - 14.28 கோடி, லட்சத் தீவு - 9.00 கோடி, மத்திய பிரதேசம் - 85.64 கோடி
- மகாராஷ்டிரா - 110.80 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மணிப்பூர் - 80.45 கோடி
- மேகாலயா - 28.00 கோடி, மிசோரம் - 39.00 கோடி, நாகாலாந்து - 45.00 கோடி, ஒடிசா - 28.00 கோடி
- புதுச்சேரி - 16.02 கோடி, பஞ்சாப் - 93.71 கோடி, ராஜஸ்தான் - 112.26 கோடி, சிக்கிம் - 25.83 கோடி
- தமிழ் நாடு - 33.00 கோடி, தெலுங்கானா - 24.11 கோடி, திரிபுரா - 38.35 கோடி,
- உத்திர பிரதேசம் - 503.02 கோடி, உத்தரகாண்ட் - 23.78 கோடி, மேற்கு வங்காளம் - 26.77 கோடி என மொத்தம் 27,54.28 கோடி ரூபாய் நிதியை மத்திய விளையாட்டு துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

**தமிழகத்தில் 71 அரசு ஐ டி ஐ -களில் புதிதாக தொழில் நுட்ப மையம் 4.0' - ரூ. 2,877 கோடி நிதி ஒதுக்கீடு:**

- தமிழகத்தில் உள்ள 91 அரசு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் (ஐடிஐ) முதல் கட்டமாக 71 - ல் டாடா நிறுவனத்துடன் இணைந்து தொழில் நுட்ப மையம் 4.0' தொடங்கப்பட உள்ளது.
- இதற்காக ரூ. 2,877.43 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், 87.5 சதவீதம் டாடா நிறுவனம், 12.5 சதவீதம் தமிழக அரசின் பங்களிப்பாகும்.
- மேலும், 71 அரசு ஐடிஐ - களிலும் தலா ரூ.3.73 கோடியில் 10,500 சதுர அடி பரப்பில் புதிய கட்டிடம் கட்டப்பட உள்ளது.

- தேர்ந்தெடுக்கப்பட்ட 71 அரசு ஐடிஐ - களுக்கும் இயந்திரங்கள், பயிற்சிக் கருவிகள் உள்ளிட்ட உள் கட்டமைப்பு வசதிகளுக்காக தலா ரூ.31 கோடி வீதம், மொத்தம் ரூ. 2,201 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- தமிழக அரசு சார்பில் கட்டுமானங்கள் உள்ளிட்டவற்றுக்காக ரூ. 2,862.01 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்துக்காக 218 புதிய பணியிடங்களும், 39 ஒப்பந்தப் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டு, அவர்களது ஊதியம் உள்ளிட்ட செலவுகளுக்காக ரூ.15.42 கோடி என மொத்தம் ரூ. 2,877.43 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- இப்புதிய மையத்தில் தொழில் நுட்பக் கருவிகள் பயன்பாடு, ரோபோ தொழில் நுட்பம், பெயின்டிங் தொழில் நுட்பம், தானியங்கி தொழிற்சாலைகளில் கணினி வழி பயன்பாடு, மின் வாகனம், இணைய தள கருவிகள், நவீன உற்பத்தி முறைகள், கணினி வழி வடிவமைப்பு, நவீன குழாய் அமைப்பு போன்ற பயிற்சிகள் நடத்தப்பட உள்ளன.

**காங்கிரஸ் எம்.பி. க்கு பிரான்ஸ் நாட்டின் மிக உயரிய "செவாலியே" விருது:**

- பிரான்ஸ் நாட்டின் செவாலியர் விருதை சிவாஜி கணேசன் கமல் ஹாசன் உள்பட பல இந்தியர்கள் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
- இந்த நிலையில் திருவனந்தபுரம் மக்களவை தொகுதி காங்கிரஸ் கட்சியின் எம்பி யான சசி தரூருக்கு பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான செவாலியே விருது கிடைத்துள்ளது.
- 23 ஆண்டுகள் ஐக்கிய நாடுகள் அவையில் தூதராக பணியாற்றிய சசி தரூர் காங்கிரஸ் கட்சியின் காங்கிரஸ் ஆட்சியில் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சராகவும் இருந்துள்ளார்.
- சசி தரூர் எம்பி ஏற்கனவே ஸ்பெயின் நாட்டின் உயரிய விருதை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழ் நாடு உப்பு நிறுவனத்தின் 'நெய்தல் உப்பு' அறிமுகம், உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.5 ஆயிரம் நிவாரணம்:**

- உப்பளத் தொழில் பருவ கால தொழில் என்பதால், உப்பளத் தொழிலாளர்களுக்கு ஓராண்டில் 9 மாதங்கள் மட்டுமே பணி புரிய வாய்ப்பு கிடைக்கும்.



- மழைக் காலத்தில் போதிய மாற்றுப் பணிகள் கிடைக்க வாய்ப்பு இல்லாததால் பெரிதும் சிரமப்படுகின்றனர்.
- இந்நிலையில், மழைக் காலங்களில் உப்பு உற்பத்தி பணிகள் பாதிக்கப்படும் நேரத்தில் உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருக்க, தமிழ் நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் சமூக பாதுகாப்பு நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.5 ஆயிரம் நிவாரண நிதியாக வழங்கப்படும் என்று 2021 - 22 - ம் ஆண்டுக்கான தொழில் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.
- அதன் படி, உப்பு உற்பத்தி இல்லாத அக்டோபர் முதல் டிசம்பர் வரை உள்ள மாதங்களுக்காக உப்பளத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.5 ஆயிரம் வழங்கும் திட்டத்தை சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்து, 5 தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகைக்கான காசோலையை வழங்கினார்.
- பொது மக்கள், பள்ளி செல்லும் குழந்தைகள் பயன் பெறும் வகையில், அயோடின் கலந்த கல் உப்பு, அயோடின் கலந்த சுத்திகரிக்கப்பட்ட தூள் உப்பு, இரு வித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை பொது விநியோக திட்டம் மூலம் மலிவு விலையிலும், மதிய உணவு திட்டத்துக்கும் தமிழ் நாடு உப்பு நிறுவனம் விற்பனை செய்து வருகிறது.
- அதன் படி, 'நெய்தல் உப்பு' என்ற புதிய வணிகப் பெயரில் அயோடின் கலந்த கல் உப்பு, அயோடின் கலந்த சுத்திகரிக்கப்பட்ட தூள் உப்பு ஆகியவற்றின் வெளிச் சந்தை விற்பனையை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

**சிறந்த புலன் விசாரணைக்கான விருது 2022:**

- மத்திய உள் துறை அமைச்சக்கம் (ஆக. 12) வெளியிட்டுள்ள அறிவிப்பில், 2022 - ம் ஆண்டு நாடு முழுவதும் சிறந்த புலன் விசாரணைக்கான விருது சிறப்பாக செயல்பட்ட 151 காவலர்களுக்கு அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

- அதில், சிபிஐ அதிகாரிகள் 15 பேர், மகாராஷ்டிரா காவலர்கள் 11 பேர், மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேச காவலர்கள் தலா 10 பேர், கேரளா, ராஜஸ்தான், மேற்கு வங்க காவலர்கள் தலா 8 பேர், பிற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச காவலர்கள் இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- மேலும், இதில் 28 மகளிர் காவலர்களும் அடக்கம். இந்நிலையில், தமிழ் நாடு காவல் துறையை சேர்ந்த நான்கு பெண்கள் உள்பட 5 பேருக்கு இவ்விருது அறிவிக்கப்பட்டது.
- கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கனகேஸ்வரி, ஆய்வாளர்கள் அமுதா, சசிகலா, பாண்டி முத்து லட்சுமி மற்றும் உதவி ஆய்வாளர் செல்வ ராஜன் ஆகியோர் மத்திய உள் துறையின் சிறந்த புலன் விசாரணைக்கான மத்திய உள் துறை அமைச்சகத்தின் விருதை பெறுகின்றனர்.

**தமிழகத்திலேயே சிறந்த மாநகராட்சியாக சேலம் தேர்வு:**

- சுதந்திர தின விழாவையொட்டி வருடம் தோறும் சிறப்பாக செயல்பட்ட மாநகராட்சி மற்றும் நகராட்சிக்கு சிறப்பு பரிசு வழங்கப்படும்.
- அது மட்டுமின்றி சிறப்பாக பணியாற்றிவர்களுக்கும் அவர்களை கௌரவிக்கும் விதமாக விருது வழங்குவது வழக்கம்.
- அதன் அடிப்படையில் சிறந்த மாநகராட்சி மற்றும் நகராட்சியை தேர்வு செய்ய ஆய்வு செய்தனர். இதில், தமிழகத்திலேயே சிறந்த மாநகராட்சியாக சேலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- வரும் 15 ம் தேதி சென்னையில் நடக்கும் சுதந்திர தின விழாவில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் விருது மற்றும் சிறப்பு நிதியாக ரூ.25 லட்சத்தை சேலம் மாநகராட்சிக்கு வழங்குகிறார்.
- இதே போல், நடப்பாண்டு சிறந்த நகராட்சிக்கான முதலிடம் பிடிக்க ஸ்ரீவில்லிபுத்தூருக்கு ரூ.15 லட்சமும், இரண்டாம் இடம் பிடித்த குடியாத்தத்திற்கு ரூ.10 லட்சமும், மூன்றாம் இடம் பிடித்த தென் காசிக்கு ரூ.5 லட்சமும் வழங்கப்படுகிறது.
- கடந்த வருடம் அதாவது 2021 ம் ஆண்டுக்கான சிறந்த மாநகராட்சியாக தஞ்சை தேர்ந்தெடுக்கப்பட்டது.
- சிறந்த நகராட்சி பட்டியலில் ஊட்டிக்கு முதலிடம் கிடைத்தது. திருச்செங்கோடு மற்றும் சின்னமனூர் அடுத்தடுத்த இடங்களை பிடித்தது.

**நல் ஆளுமை விருது: தமிழ் நாடு அரசு அறிவிப்பு:**

- இந்த ஆண்டுக்கான நல் ஆளுமை விருதுக்கு தேர்வாகியுள்ளோர் விவரங்களை தமிழ் நாடு அரசு வெளியிட்டுள்ளது.
- ஆண்டு தோறும் விடுதலை நாள் விழாவை யொட்டி, அரசுத் துறைகள், அரசு ஊழியர்கள், அரசு சார்பு அமைப்புகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் சிறந்த செயல்பாடுகளைப் பாராட்டி நல் ஆளுமை விருதுகள் வழங்கப்படுவது வழக்கம். இது போன்று, நிகழாண்டிலும் விடுதலை நாளின் போது நல்ஆளுமை விருதுகள் வழங்கப்படவுள்ளன.
- செங்கல் சூளையில் பணி புரிந்தவர்களை மீட்டெடுத்து தொழில் முனைவோராக வாழ்க்கைத் தரத்தை உயர்த்திய பணிக்காக, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரும், திருநங்கைகளின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிகளை எடுத்தமைக்காக செங்கல்பட்டு மாவட்ட சமூக நல அலுவலரும் நல் ஆளுமை விருதுக்கு தேர்வாகியுள்ளனர்.
- மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்கி நிலத்தடி நீரை செறிவூட்டும் பணிகளைச் செய்தமைக்காக, திண்டுக்கல், சிவகங்கை மாவட்ட ஆட்சியர்கள் விருதுக்கு தேர்வாகியுள்ளனர்.
- மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பேறு கால நலனை தகவல் தொழில் நுட்ப உதவிகளுடன் கண்காணித்து சிறப்பான சுகாதார திட்டத்தை முன்னெடுத்த காரணத்துக்காக திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரும் நல் ஆளுமை விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- வேளாண் இயந்திரங்களை கைப்பேசி செயலி வழியாக வாடகைக்கு விடும் திட்டத்தை அமல்படுத்தியதற்காக தமிழ் நாடு வேளாண் பொறியியல் துறையின் முதன்மைப் பொறியாளரும், சென்னையில் ஆதரவற்ற, மனநிலை பாதித்தோரை மீட்டு பராமரிக்கும் திட்டத்தை செயல்படுத்தியதற்காக சென்னை பெருநகர காவல் துறை ஆணையாளருக்கு நல் ஆளுமை விருது அளிக்கப்படவுள்ளது.
- நல் ஆளுமை விருதானது, விருதும், தலா ₹2 லட்சம் பரிசுத் தொகையும் அடங்கியதாகும்.

**அகஸ்திய மலையில் யானைகள் சரணாலயம் - மத்திய வனத் துறை அமைச்சர் அறிவிப்பு:**

- "தமிழகத்தில் அகஸ்திய மலையில் புதிய யானைகள் சரணாலயம் அமைக்கப்படும்," என, மத்திய வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் பூபேந்திர யாதவ் அறிவித்தார்.

- தேக்கடியில் நடந்த சர்வதேச யானைகள் தின விழாவில் பங்கேற்ற மத்திய அமைச்சர் பூபேந்திர யாதவ் பேசியதாவது: பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியை சுற்றி, 1 கி.மீ., இடை வெளியில் பாதுகாப்பு மண்டலம் அமைக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பு குறித்து, மத்திய அரசும், அமைச்சகமும் மறு ஆய்வு மனு தாக்கல் செய்யும்.
- யானைகள், மனிதர்களுக்கு இடையேயான மோதலை கட்டுப்படுத்துவதே மத்திய அரசின் முக்கிய கவனம்.
- யானை தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு, நிவாரணத் தொகை, 2 லட்சம் ரூபாயில் இருந்து, 5 லட்சம் ரூபாயாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

**பதிவுத் துறைக்கு கூடுதல் அதிகாரம் அளிக்கும் சட்ட திருத்த மசோதாவுக்கு ஜனாதிபதி ஒப்புதல்:**

- போலி பத்திரப்பதிவு செய்தால் 3 ஆண்டுகள் சிறை தண்டனையும், புகார் அளித்ததால் 30 நாட்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.
- தமிழகத்தில் 575 சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. இதன் மூலம் வீடு, விளை நிலம் உள்ளிட்ட பதிவு செய்யப்படுகிறது.
- இவ்வாறு பத்திரங்கள் பதிவு செய்யப்படும் போது, ஒரு சில சார்பதிவாளர்கள் பதிவு பணியின் போது, மூல பத்திரங்களை கேட்டு ஆய்வு செய்வதில்லை. அதே போன்று அந்த சொத்துக்கான வில்லங்கமும் பார்க்காமல், பத்திரம் பதிவு செய்கின்றனர்.
- இதை பயன்படுத்தி கொண்டு சமூக விரோதிகள் சிலர் போலி ஆவணங்களை தயாரித்து பத்திரப் பதிவு செய்வதாக கூறப்படுகிறது.
- இந்த விவகாரம் தொடர்பாக ஒரிஜினல் உரிமையாளர்கள் சிட்டி சிவில் நீதிமன்றத்தை அணுக வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.
- ஏற்கனவே, இது போன்ற வழக்குகள் ஏராளமானவை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், போலி ஆவண பதிவு விவகாரத்தில் உடனடியாக தீர்ப்பு கிடைப்பதில்லை.
- இதனால், ஒரிஜினல் உரிமையாளர்கள் தங்களது சொத்துக்களை பயன்படுத்த முடியாத நிலையில், அவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகும் நிலை தான் உள்ளது.
- இப்பிரச்னைக்கு முடிவு கட்டும் வகையில் போலி பத்திரங்களை ரத்து செய்யும் அதிகாரம் மாவட்ட பதிவாளர்கள், டிஐஜிக்களுக்கு வழங்கும் அதிகாரம் சட்ட மசோதா சட்டப் பேரவையில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

Adda247 தமிழ்

- இந்த சட்ட மசோதாவின் படி, போலி பத்திரப் பதிவு தொடர்பாக மாவட்ட பதிவாளர் விசாரணை செய்து ரத்து செய்யலாம்.
- இதனால், யாருக்காவது இடர்பாடு ஏற்பட்டால் ரத்து செய்யப்பட்ட தேதியில் இருந்து 30 நாட்களுக்குள் அவர் ஐஜியிடம் முறையீடலாம். அதன் பிறகு செயலாளர் வரை முறையிடலாம்.
- போலி பத்திரம் பதிவு செய்யப்பட்டதாக கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு 3 ஆண்டு சிறை தண்டனை வழங்கவும், அபராதம் வசூலிக்கவும் சட்டத் திருத்ததில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.
- இந்த சட்டத் திருத்தத்துக்கு கடந்தாண்டு செப்டம்பர் இறுதியில் கவர்னர் ஆர். என். ரவி ஒப்புதல் அளித்தார்.




- தொடர்ந்து ஒன்றிய அரசின் சட்டத் துறைக்கு இந்த மசோதா அனுப்பி வைக்கப்பட்டது. இதையடுத்து ஒன்றிய அரசின் சட்டத் துறை செயலாளருக்கு தமிழக அரசின் சட்டத் துறை சார்பில் கடிதம் எழுதியது.
- இது தொடர்பாக தமிழக சட்டத் துறை அதிகாரிகளும் ஒன்றிய அரசின் சட்டத் துறை அதிகாரிகளுடன் பேசி வந்தனர். அதன் படி ஒன்றிய அரசின் சட்டத் துறை இந்த மசோதாவுக்கு அனுமதி அளித்துள்ளது.
- அதைத் தொடர்ந்து அங்கிருந்து உள் துறை அமைச்சகத்தின் ஒப்புதல் பெற்று ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.
- இந்நிலையில் தற்போது மோசடியாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை ரத்து செய்ய பதிவுத் துறைக்கு அதிகாரம் அளிக்கும் சட்ட மசோதாவுக்கு ஜனாபதி திரவுபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.
- இதன் படி சட்ட திருத்த மசோதா அமலுக்கு வருகிறது. இந்த சட்ட திருத்த மசோதா மூலம் சட்ட விரோதமாக நிலங்களை பத்திரப் பதிவு செய்த நில அபகரிப்பாளர்களிடம் இருந்து மீட்டு சொத்துகளை உரியவர்களுக்கு பெற்று தர முடியும்.

**முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் மாநில திட்டக் குழு கூட்டம்:**

- முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் மாநில திட்டக் குழுவின் 3 - வது ஆய்வு கூட்டம் தொடங்கி நடைபெற்று வருகிறது.
- சென்னை சேப்பாக்கம் எழிலகத்தில் உள்ள திட்டக் குழு அலுவலகத்தில் இக்கூட்டம் நடைபெறுகிறது.
- இக்கூட்டத்தில், குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெய ரஞ்சன், முழு நேர, பகுதி நேர உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர்.
- இக்கூட்டத்தில், இலக்கு நிர்ணயிப்பது, கண்காணிப்பு, மதிப்பீடு, கொள்கைக்கான ஆலோசனை வழங்குவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**சென்னையில் வீர மங்கை வேலு நாச்சியார் நாட்டிய நாடகம் - முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்:**

- சென்னை கலை வாணர் அரங்கில் கலை பண்பாட்டுத் துறை, இயல் இசை நாடக மன்றம் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில், வீர மங்கை வேலு நாச்சியார் இசையார்ந்த நாட்டிய நாடக தொடக்க விழா நடந்தது.
- இந்த விழாவில் கலந்து கொண்ட தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வீர மங்கை வேலு நாச்சியார் இசையார்ந்த நாட்டிய நாடக விழாவை தொடங்கி வைத்தார்.

**தமிழ் நாட்டில் முதன் முறையாக சர்வதேச பட்டம் விடும் திருவிழா:**

- தமிழகத்தில் முதன் முறையாக மாமல்லபுரத்தில் சர்வதேச பட்டம் விடும் திருவிழா தொடங்கியுள்ளது. இதனை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மதி வேந்தன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.
- இதில் அமெரிக்கா, தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும், குஜராத், ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் இருந்து வந்துள்ள கலைஞர்களும் பங்கேற்றுள்ளனர்.

**நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக போலீஸ் அதிகாரிகளுக்கு காவல் பதக்கம் அறிவிப்பு:**

- நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 15 காவலர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பதக்கம் வழங்கி கௌரவிக்க உள்ளார். இவர்களுக்கு ஆகஸ்ட் 15 - ஆம் தேதி திங்கள் கிழமை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் காவல் பதக்கங்களை வழங்குகிறார்.
- அந்த வகையில் தன்னலமற்ற சேவை மற்றும் சிறந்த அர்ப்பணிப்பு பதக்கத்தை 5 பேர் பெறுகின்றனர். அவர்கள்,
- பிரேம் ஆனந்த் சின்ஹா (சென்னை தெற்கு கூடுதல் ஆணையர்)
- கே. அம்பேத்கர் (கடலூர் சிஐடி சிறப்பு பிரிவு காவல் ஆய்வாளர்)

- எஸ். சிவ ராமன் (சென்னை சிட்டி போக்குவரத்து சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்)
- வி. பழனியாண்டி (சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மதுரை)
- எம். குமார் (போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் தாம்பரம்)
- இதே போல் குற்ற விசாரணையில் சிறப்பாக ஈடுபட்ட 10 பேருக்கு முதலமைச்சர் காவல் பதக்கங்கள் வழங்குகிறார். அவர்கள்,
- ஜி. ஸ்டாலின் (மதுரை துணை ஆணையர்)
- எஸ். கிருஷ்ணன் (சேலம் சிட்டி குற்ற பிரிவு சிஐடி)
- எம். பிருந்தா (விழுப்புரம் போலீஸ் மாவட்ட காவல் ஆய்வாளர்)
- ஏ. பிரபா (நாமக்கல் சிபிசிஐடி ஆய்வாளர்)
- வி. ஸ்ரீநிவாசன் (சென்னை தெற்கு மண்டல காவல் கண்காணிப்பாளர்)
- எம். சுமதி (திண்டுக்கல் மாவட்ட காவல் ஆய்வாளர்)
- சி. நாக லெட்சுமி (நாகப்பட்டினம் மாவட்ட காவல் ஆய்வாளர்)
- வி. துளசி தாஸ் (சென்னை மாநகர காவல் உதவி ஆய்வாளர்)
- எல். பார்த்த சாரதி (சென்னை போலீஸ் சிபிசிஐடி காவல் உதவி ஆய்வாளர்)
- கே. இளையராஜா (சென்னை மாநகர காவல் மது விலக்கு அமலாக்க பிரிவு காவல் உதவி ஆய்வாளர்)
- இந்த 15 காவல் அதிகாரிகளுக்கும் 8 கிராம் எடையுள்ள தங்க பதக்கம் மற்றும் ரூ.25 ஆயிரம் ரொக்கம் பரிசாக வழங்கப்படும்.

**சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடி ஏற்றினார் முதல்வர் ஸ்டாலின்:**

- நாட்டின் 75 - வது சுதந்திர தின நிறைவு, அமுதப் பெரு விழாவாக கொண்டாடப்பட்டது. தமிழக அரசின் சார்பில் சென்னை புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் சிறப்பான விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து, பல்வேறு காவல் படையினரின் அணி வகுப்பு மரியாதையை முதல்வர் ஏற்றுக் கொண்டார். அதன் பின், கோட்டை கொத்தளத்துக்கு வந்த முதல்வர் ஸ்டாலின், சரியாக 9 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.



- முதல்வர் தனது சுதந்திர தின உரையில் பேசியதாவது: இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள் 1,095 பேருக்கு மாதந்தோறும் தியாகிகளுக்கான நிதிக் கொடையை வழங்கி வருகிறோம்.
- நாட்டுக்காக போராடிய தியாகிகளை போற்றும் வகையில் விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கும், அவர்கள் இறக்க நேரிட்டால், வாரிசுகளுக்கும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில், இந்திய விடுதலையின் பவள விழா நிறைவுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் சில அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.
- விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மாநில அரசின் மாதாந்திர ஓய்வூதியத் தொகை, ஆகஸ்ட் 15 முதல் ரூ.18 ஆயிரத்தில் இருந்து ரூ.20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.
- குடும்ப ஓய்வூதியம் ரூ.9 ஆயிரத்தில் இருந்து ரூ.10 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். வீரபாண்டிய கட்டபொம்மன், சிவகங்கை மருது பாண்டிய சகோதரர்கள், சிவகங்கை முத்து ராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி, வ.உ. சிதம்பரனார் வழித் தோன்றல்களுக்கான மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம் ரூ.9 ஆயிரத்தில் இருந்து ரூ.10 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.
- மத்திய அரசுப் பணியாளர்களுக்கு இணையாக, மாநில அரசுப் பணியாளர்களுக்கும் அக விலைப் படியை உயர்த்தி வழங்கும் கோரிக்கையை ஏற்று, கடுமையான நிதிச் சுமைக்கு இடையிலும் அரசு அலுவலர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ஜூலை 1 - ம் தேதி முதல் அக விலைப் படி 31 சதவீதத்தில் இருந்து 34 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம், 16 லட்சம் பேர் பயன் பெறுவர்.
- அரசுக்கு ஆண்டுக்கு ரூ. 1,947.60 கோடி கூடுதலாக செலவாகும். விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் 260 ஆண்டு கால தொடர் பங்களிப்பு குறித்து எதிர் கால இளம் சமுதாயம் அறிந்து கொள்ளும் வகையில், நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய 'விடுதலை நாள் அருங்காட்சியகம்' ஒன்று சென்னையில் அமைக்கப்படும்.

**Dr அப்துல் கலாம் விருது உள்பட பல்வேறு விருதுகள்: முதல்வர் மு. க ஸ்டாலின் வழங்கினார்:**

- அறிவியல் தொழில் நுட்பத்தில் சிறப்பான பங்களிப்பைச் செய்த முனைவர் ச இஞ்ஞாசி முத்துவுக்கு, Dr ஆ பஜெ அப்துல் கலாம் விருது வழங்கப்பட்டது.

- அவருக்கு, 15 இலட்சம் காசோலை, 8 கிராம் தங்கப் பதக்கம், சான்றிதழ் அடங்கிய Dr அப்துல் கலாம் விருது வழங்கப்பட்டது.
- துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருதினை, நாகப்பட்டினம் மாவட்டம் கீழ் வேளூரைச் சேர்ந்த பா எழிலரசி பெற்றார்.
- இந்த விருதானது 15 இலட்சம் காசோலை, தங்க முலாம் பூசப்பட்ட பதக்கம், சான்றிதழ் அடங்கியது.
- முதலமைச்சரின் நல் ஆளுமை விருது: திருவள்ளூர் மாவட்டத்தில் கொத்தடிமைத் தொழிலாளர்களை மீட்டு மறு வாழ்வு அளித்த சிறப்பான செயலைப் பாராட்டி, அம்மாவட்ட ஆட்சியருக்கும், திருநங்கைகளின் வாழ்வில் நம்பிக்கை ஊட்டி அவர்களது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்த பணிகளுக்காக செங்கல்பட்டு மாவட்ட சமூக நல அலுவலகத்துக்கும் முதலமைச்சரின் நல் ஆளுமை விருது அறிவிக்கப்பட்டது.
- மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை சிறப்பாக செயல்படுத்தியதற்காக திண்டுக்கல் மாவட்டம், நீர் நிலைகளை மீட்டுருவாக்கி புனரமைப்பு செய்த பணிகளுக்காக சிவ கங்கை மாவட்டம், கருவுற்ற தாய்மார்களின் உடல் நலனை தொழில் நுட்ப உதவியுடன் கண்காணிக்கும் தாய் கேர் நெல்லை திட்டத்தை அறிமுகப்படுத்திய திருநெல்வேலி மாவட்டத்துக்கும் நல் ஆளுமை விருதுகள் அறிவிக்கப்பட்டிருந்தன. இந்த விருது தலா ₹2 இலட்சமும், பாராட்டுச் சான்றும் கொண்டது.
- வேளாண் இயந்திரங்களை இணைய தளம், கைப்பேசி செயலி மூலமாக ஆன் - லைன் வழியே வாடகைக்கு விடும் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக வேளாண்மைத் துறை தலைமை பொறியியல் துறைக்கு நல் ஆளுமை விருது அறிவிக்கப்பட்டது.
- மாற்றுத் திறனாளிகள், மன நலம் பாதிக்கப்பட்ட முதியோர், பெண்கள் ஆகியோரை காப்பகங்களில் வைத்து பராமரித்தும், உரிமை கோரப்படாத இறந்தோரின் உடல்களை உரிய மரியாதையுடன் அடக்கம் செய்யும் திட்டத்தையும் சென்னை பெரு நகர காவல் துறை செய்து வருகிறது.
- இந்தப் பணியைப் பாராட்டி சென்னை பெரு நகர காவல் ஆணையரகத்துக்கும் நல் ஆளுமை விருது அறிவிக்கப்பட்டது.
- மகளிர் நலனுக்காக சிறந்த சேவைகளை ஆற்றியதாக நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த வானவில் அறக் கட்டளை, சிறந்த சமூக சேவகருக்கான விருது திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த ஜி பங்கஜம் ஆகியோருக்கு அளிக்கப்பட்டது.
- இந்த விருது 10 கிராம் தங்கப் பதக்கம், சான்றிதழ் அடங்கியது.

- சிறந்த உள்ளாட்சி அமைப்புகள்: சிறந்த மாநகராட்சிக்கான விருதை சேலம் மாநகராட்சி பெற்றது. ₹25 லட்சத்துக்கான காசோலை அடங்கியது இந்த விருது.
- சிறந்த நகராட்சிகளாக முதலிடத்தில் தேர்வான திருவில்லிபுத்தூருக்கு ₹15 இலட்சத்துக்கான காசோலையும், இரண்டாமிடம் பிடித்த குடியாத்தத்துக்கு ₹10 இலட்சத்துக்கான காசோலையும், மூன்றாம் இடம் பிடித்த தென்காசிக்கு ₹5 இலட்சத்துக்கான காசோலையும் வழங்கப்பட்டது.
- சிறந்த பேரூராட்சிகளின் வரிசையில், செங்கல்பட்டு மாவட்டம் கருங்குழி பேரூராட்சி முதலிடத்தை பிடித்தது.
- இரண்டாமிடத்தை கன்னியாகுமரி பேரூராட்சி பிடித்தது.
- மதுரை மாவட்டம் சோழவந்தான் பேரூராட்சி மூண்றாமிடம் பிடித்தது.

**தொழில் நுட்ப பரிமாற்றம், கூட்டு ஆராய்ச்சிக்காக தமிழ் நாடு கால் நடை பல்கலை. - அமெரிக்க பல்கலை. ஒப்பந்தம் - அமைச்சர் அனிதா ராதா கிருஷ்ணன் முன்னிலையில் கையெழுத்து:**

- இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் நிறுவன வளர்ச்சி திட்டத்தின் நிதியுதவியுடன் தமிழ் நாடு கால் நடை மருத்துவப் பல்கலைக் கழகத்தின் 10 இளநிலை மாணவர்கள் கடந்த 2019 நவம்பர் முதல் 2020 ஜனவரி வரை 3 மாதங்களுக்கு ஒக்லஹாமா ஸ்டேட் பல்கலைக் கழகத்தில் பயிற்சி பெற்றுள்ளனர்.
- அதே போல், அங்கிருந்து 6 மாணவர்கள் 2019 ஜூன், ஜூலையில் 31 நாட்களுக்கு இங்கு வந்து மருத்துவமனைகளில் பயிற்சி பெற்றனர்.
- கரோனா பரவலால் இந்த பரிமாற்ற திட்டத்தை தொடர முடியாமல் இருந்தது. இதற்கிடையில் இந்த ஆண்டில் முடிவடைய இருந்த ஒப்பந்தத்தை மேலும் 5 ஆண்டுகளுக்கு புதுப்பிக்க முடிவு செய்யப்பட்டது.
- இந்நிலையில், கால் நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன் முன்னிலையில், தமிழ் நாடு கால் நடை மருத்துவ அறிவியல் பலகலைக் கழகத் துணை வேந்தர் க.ந. செல்வக் குமார், ஒக்லஹாமா ஸ்டேட் பல்கலைக் கழக கால் நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் கார்லோஸ் ரிஸ்கோ ஆகியோர் கையெழுத்திட்டு, ஒப்பந்தத்தை பரிமாறிக் கொண்டனர்.

**காரைக்குடி அழகப்பா, நெல்லை மனோன்மணியம் சுந்தரனார், வேலூர் திருவள்ளுவர் பல்கலைக் கழகங்களுக்கு துணை வேந்தர்கள் நியமனம் - ஆளுநர் ஆர். என். ரவி அறிவிப்பு:**

- காரைக்குடி அழகப்பா, நெல்லை மனோன்மணியம் சுந்தரனார், வேலூர் திருவள்ளுவர் ஆகிய 3 பல்கலைக் கழகங்களுக்கு புதிய துணை வேந்தர்களை நியமனம் செய்து ஆளுநர் ஆர். என். ரவி உத்தரவிட்டுள்ளார்.

- காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக துணை வேந்தராக இருந்த ராஜேந்திரனின் பதவிக் காலம் 2021 - ம் ஆண்டு ஜூன் 4 - ம் தேதி நிறைவடைந்தது.
- இந்நிலையில், தமிழக ஆளுநராக பொறுப்பேற்ற ஆர். என். ரவி, காரைக்குடி அழகப்பா பல்கலை. க்கு புதிய துணை வேந்தரை நியமிக்க யுஜிசி தலைவர் ஜெகதீஷ் குமார் தலைமையில் புதிய தேடுதல் குழுவை அமைத்தார்.
- அந்தக் குழு பரிந்துரைத்த 3 பேரில் ஜி. ரவியை அழகப்பா பல்கலைக் கழக புதிய துணை வேந்தராக நியமனம் செய்து ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.
- திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக துணை வேந்தராக இருந்த பிச்சு மணியின் பதவிக் காலம் கடந்த பிப்ரவரி மாதத்துடன் முடிவடைந்தது.
- புதிய துணை வேந்தர் நியமனம் செய்யப்படும் வரை பணியில் தொடர அவருக்கு நீட்டிப்பு வழங்கப்பட்டது. தற்போது தேடுதல் குழுவின் பரிந்துரையின் படி புதிய துணை வேந்தராக பேராசிரியர் என். சந்திர சேகர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- வேலூர் திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தின் புதிய துணை வேந்தராக கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி ஆராய்ச்சி நிறுவன தோட்டக்கலைத் துறை தலைவராக உள்ள டி. ஆறுமுகம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**பிரதமருடன் முதல்வர் ஸ்டாலின் சந்திப்பு:**

- சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் 44 - வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி, கடந்த ஜூலை 28 முதல் ஆக. 9 வரை நடந்தது. இந்நிலையில், பிரதமரை சந்தித்து, நன்றி தெரிவிப்பதற்காக முதல்வர் ஸ்டாலின், சென்றார்.
- இதையடுத்து, குடியரசுத் தலைவர் மாளிகையில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை முதல்வர் ஸ்டாலின் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். அப்போது, 44 - வது செஸ் ஒலிம்பியாட் போட்டி நிகழ்வுகளின் தொகுப்பு அடங்கிய 'ஹோம் ஆஃப் செஸ்' என்ற நூலையும், தமிழகத்தின் பாரம்பரிய நெல் ரகங்கள் அடங்கிய பெட்டகத்தையும் குடியரசுத் தலைவருக்கு முதல்வர் பரிசளித்தார்.
- அதைத் தொடர்ந்து, குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கரையும் மரியாதை நிமித்தமாக சந்தித்த முதல்வர், அவருக்கும் வாழ்த்து தெரிவித்தார். அதைத் தொடர்ந்து மாலை பிரதமர் நரேந்திர மோடியை முதல்வர் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பு மாலை 4.30 வரை நீடித்தது.
- 44 - வது செஸ் ஒலிம்பியாட் போட்டி தொடக்க விழாவுக்கு வந்து போட்டியை தொடங்கி வைத்ததற்காகவும், விருந்தோம்பல் குறித்து பாராட்டியதற்கும் பிரதமருக்கு முதல்வர் நன்றி தெரிவித்தார்.

- பின்னர், தமிழகத்தின் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை பிரதமரிடம் அளித்தார். குறிப்பாக, நீட் விலக்கு மசோதாவுக்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலை பெற்றுத் தருவது, ஜிஎஸ்டி இழப்பீட்டை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிப்பது, புதிய கல்விக் கொள்கை, தமிழகத்துக்கு துறைகள் வாரியாக வர வேண்டிய நிலுவைத் தொகைகள், இலங்கை கடற்படையால் தமிழக மீனர்கள் சிறைபிடிக்கப்படுவது, நதி நீர் இணைப்புத் திட்டம் உள்ளிட்ட கோரிக்கைகளை முதல்வர் வலியுறுத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.
- இந்த சந்திப்பின் போது, பிரதமருக்கும் பாரம்பரிய நெல் ரகங்கள், சிறு தானியங்கள் அடங்கிய நினைவுப் பரிசு மற்றும் செஸ் ஒலிம்பியாட் நிகழ்வுகள் அடங்கிய தொகுப்பு நூல் ஆகியவற்றை முதல்வர் வழங்கினார்.




**டெல்லியில் பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் பரிசாக வழங்கிய 9 நெல், தானியங்களின் சிறப்பு அம்சம்:**

- குடியரசுத் தலைவர் மற்றும் பிரதமருக்கு தமிழகத்தின் சிறு தானியங்கள், பாரம்பரிய அரிசி ரகங்கள் இடம் பெற்ற பெட்டகத்தை நினைவுப் பரிசாக முதல்வர் வழங்கினார். அந்த பரிசுப் பெட்டகத்தில் மாப்பிள்ளை சம்பா, கருப்பு கவுனி, குள்ளக்கார், சீரகசம்பா, குடவாழை ஆகிய பாரம்பரிய அரிசி ரகங்கள், கேழ்வரகு, கம்பு, சாமை, திணை, வரகு ஆகிய சிறு தானியங்கள் இடம் பெற்றிருந்தன.
- பெட்டியின் மேல் 'கோல்டன் கிரைன்ஸ் ஆஃப் தமிழ் நாடு' என்று ஆங்கிலத்திலும் தமிழ் நாட்டின் தானியங்கள் என்று தமிழிலும் எழுதப்பட்டிருந்தது.
- ஓடி ஓயாது உழைக்கும் விளிம்பு நிலை மனிதனின் வயிற்று பசியையும், மரத்தின் விளிம்பில் நின்று கொண்டு காடு வளர்க்கும் பணி செய்யும் பறவையின் பசியையும் ஆற்றிய நிலம், 100 க்கும் மேற்பட்ட அரிசி வகைகளாலும், பல வகை சிறு தானியங்களாலும் நிறைந்தது தமிழ் நிலம்.
- மாப்பிள்ளை சம்பா - சிகப்பு நிறத்தால் ஆண்ட்டி ஆக்சிடன்ட் தன்மையை கொடுத்து நோயின்றி காக்கும் அரிசி.

- குள்ளக்கார் - பாலூட்டும் பெண்களுக்கும் கருத்தரிக்கும் பெண்களுக்கும் ஊட்டம் தரும் அரிசி.
- கருப்புக் கவுனி - நெடுங்காலம் அரசர்களுக்கு மட்டும் பயிரிடப்பட்ட ஆந்தோசயனைன் நிறைந்த புற்றை தடுக்கும் கருப்பு அரிசி.
- சீரக சம்பா - பாலாற்றங்கரையில் பயிராகும் தனித்துவ மணம் கொண்ட சுவை மிக்க அரிசி.
- குடவாழை - தோலுக்கு பொலிவு அளிக்கும் மரபு சிகப்பு அரிசி இது.
- கம்பு - அருந்தானியங்களின் அரசன் இவன். அரிசியைவிட 8 மடங்கு அதிக இரும்புச் சத்து கொண்ட சர்க்கரை நோயாளிக்கான லோ கிளைசிமிக் அரிசி.
- வரகு - தமிழ் மூதாட்டி அவ்வை விரும்பி கேட்டு உண்ட மெல்ல சர்க்கரை தரும் மரபு தானியம்.
- சாமை - பழங்குடி மக்கள் பயிராக்கி படைத்திடும் மருத்துவ குணமிக்க சிறு தானியம்.
- தினை - கண்ணுக்கும் குழந்தைக்கும் நலம் தரும் பொன்னிற தானியம்.
- கேழ்வரகு - இரும்பும் கால்சியமும் நிறைந்த, தாய்ப்பாலுக்கு அடுத்ததாக தரப்பட வேண்டிய முதல் திட உணவு.
- 65 - வது காமன் வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில் தமிழக கிளையின் பிரதிநிதியாக பேரவை தலைவர் மு. அப்பாவு கலந்து கொள்கிறார்.
- வருகிற 22 ம் தேதி முதல் 26 ம் தேதி வரை கனடா நாட்டின் ஹாலிபேக்ஸ் நகரில் நடைபெறவிருக்கும் 65 வது காமன் வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில் தமிழக கிளையின் பிரதி நிதியாக பேரவை தலைவர் மு. அப்பாவு கலந்து கொள்கிறார்.
- சட்டமன்ற செயலாளர் சீனிவாசனும் இந்த மாநாட்டில் நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொள்கிறார்.

**தமிழக மின் வாரியத்திற்கு பெஸ்ட் எக்ஸ்போர்ட்டர் விருது 2022:**

- ஒடிசா மாநிலத்தில் உள்ள மத்திய அரசின், 'கோல் இந்தியா' நிறுவனத்திற்கு சொந்தமான, 'தால்சர், ஐ.பி., வேலி' ஆகிய சுரங்கங்களில் இருந்து எடுக்கப்படுகிறது. பின், அம்மாநிலத்தில் உள்ள பாரதீப் துறைமுகத்திற்கு அனுப்பப்படுகிறது. அங்கிருந்து, கப்பல்களில் நிலக்கரி ஏற்றி, தமிழகத்திற்கு எடுத்து வரப்படுகிறது.
- பாரதீப் துறைமுக ஆணையம், 2021 - 22 ம் நிதியாண்டில், 'பெஸ்ட் எக்ஸ்போர்ட்டர்' என்ற பிரிவின் கீழ் அதிக நிலக்கரியை கையாண்டதற்காக, தமிழக மின் வாரியத்திற்கு விருது வழங்கி உள்ளது.

**சென்னை உயர் நீதிமன்றத்தின் 160 - ஆவது ஆண்டு தினம்: அஞ்சல் தலை வெளியீடு:**

- விடுதலை நாளையொட்டி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தேசியக் கொடி ஏற்றி வைத்து தலைமை நீதிபதி முனீசுவர் நாத் பண்டாரி மரியாதை செலுத்தியதுடன், நீதிமன்றத்தின் 160 - ஆவது ஆண்டு தினத்தையொட்டி, சிறப்பு தபால் தலையையும் வெளியிட்டார்.
- 1862 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 - ஆம் தேதி தொடங்கப்பட்ட சென்னை உயர் நீதிமன்றத்தின் 160 - ஆவது ஆண்டு நினைவைப் போற்றும் வகையில், சிறப்பு தபால் தலையை தலைமை நீதிபதி வெளியிட, உயர் நீதிமன்ற மூத்த நீதிபதி துரைசாமி பெற்றுக் கொண்டார்.

**ஜூலை 2022 மாதத்திற்கான விவசாயம் மற்றும் கிராமப் புற தொழிலாளர்களுக்கான அகில இந்திய நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் - அதிக புள்ளிகளுடன் தமிழகம் முதலிடம்:**

- ஜூலை 2022 மாதத்திற்கான விவசாய மற்றும் கிராமப்புற தொழிலாளர்களுக்கான அகில இந்திய நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் (அடிப்படை 1986 - 87 = 100) 6 புள்ளிகள் அதிகரித்து முறையே 1131 மற்றும் 1143 ஆக உள்ளது.
- அரிசி, கோதுமை - ஆட்டா, கம்பு, தானியங்கள், பால், மீன் வெங்காயம், பச்சை / காய்ந்த மிளகாய், இஞ்சி, காய்கறிகள், பழங்கள் போன்றவற்றின் விலை உயர்வே, விவசாய மற்றும் கிராமப் புற தொழிலாளர்களுக்கான பொது குறியீட்டு உயர்வுக்கு முக்கிய காரணமாக உள்ளது. இந்தக் குறியீட்டு உயர்வு, மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டது.
- விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை, 20 மாநிலங்களில் 1 புள்ளி முதல் 13 புள்ளிகள் வரை உயர்ந்துள்ள வேளையில், 1301 புள்ளிகளுடன் தமிழகம் பட்டியலில் முதலிடத்திலும், 890 புள்ளிகளுடன் இமாச்சலப் பிரதேசம் கடைசி இடத்திலும் உள்ளன.
- கிராமப் புறத் தொழிலாளர்களைப் பொறுத்த வரை, 20 மாநிலங்களில் 1 முதல் 13 புள்ளிகள் அதிகரித்துள்ள நிலையில், தமிழகம் 1290 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், இமாச்சலப் பிரதேசம் 942 புள்ளிகளுடன் கடைசி இடத்திலும் உள்ளன.

**'ஸ்மார்ட் சிட்டி' முறைகேடுகள் குறித்து விசாரித்த, ஓய்வு பெற்ற ஐ.ஏ. எஸ்., அதிகாரி டேவிதார் விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு:**

- மத்திய அரசின் நிதியுதவியுடன், 2015 ஜூன் 25 ம் தேதி நாடு முழுதும், 100 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டு, அங்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்த, 'சீர்மிகு நகரம்' திட்டம் துவக்கப்பட்டது.
- சென்னை, கோவை, மதுரை, தஞ்சாவூர், சேலம், வேலுார், திருப்பூர், துாத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சி, ஈரோடு நகரங்கள் தேர்வு செய்யப்பட்டன.
- இந்நகரங்களில், பல்வேறு திட்டங்களை செயல்படுத்த, நகருக்கு, 490 கோடி ரூபாய் வீதம், 5,390 கோடி ரூபாய், மத்திய அரசு ஒதுக்கியது. இதில், 3,969 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டது.
- இன்னும், 1,421 கோடி ரூபாய் வர வேண்டி உள்ளது. மாநில அரசு, நகருக்கு தலா 500 கோடி ரூபாய் வீதம், 5,500 கோடி ரூபாய் ஒதுக்கியது. இதில், 4,000 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டது.
- இன்னும், 1,500 கோடி ரூபாய் தரப்பட வேண்டும். தேர்வு செய்யப்பட்ட 11 நகரங்களில், 644 திட்டங்களை செயல்படுத்த, 10 ஆயிரத்து 651 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டது. இதில், 257 திட்டங்கள், 2,328 கோடி ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்டன.
- அடுத்து, 7,947.50 கோடி ரூபாய் மதிப்பில், 339 திட்டப் பணிகள் நடந்து வருகின்றன. மீதமுள்ள பணிகளுக்கு, 'டெண்டர்' மற்றும் திட்ட அறிக்கை, தயாரிப்பு நிலையில் உள்ளன.
- கடந்த ஆண்டு மழையில், சென்னை நகரம் மிதந்தது தொடர்பாக, எம்.எல்.ஏ. க்கள் சட்ட சபையில் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த முதல்வர், 'சீர்மிகு திட்டப் பணிகளை முறையாக செய்யாததே, இதற்கு காரணம்.
- திட்டச் செயல்பாடு குறித்து விசாரிக்க, ஒரு விசாரணைக் குழு அமைக்க போகிறோம்' என்றார்.
- அதைத் தொடர்ந்து, மார்ச் மாதம், ஓய்வு பெற்ற ஐ.ஏ. எஸ்., அதிகாரி டேவிதார் தலைமையில், ஒரு நபர் விசாரணைக் குழு அமைக்கப்பட்டது.
- இக்குழு, பல்வேறு தரப்பினரிடம் விசாரணை நடத்தியது. அதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட, 200 பக்க அறிக்கையை, நேற்று தலைமைச் செயலகத்தில், முதல்வர் ஸ்டாலினிடம், டேவிதார் வழங்கினார். தலைமைச் செயலர் இறையன்பு உடனிருந்தார்.

**சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கையேடு - முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்:**

- நல்ல சாலை கட்டமைப்புகளை ஏற்படுத்துவதில் தேசிய அளவில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- தமிழகத்தில் உள்ள சாலைகளின் மொத்த நீளம் 2.61 லட்சம் கி. மீ ஆகும். இவற்றில் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் 70,556 கி.மீ. நீள சாலைகள் உள்ளன.
- இவை தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் என பல்வேறு பிரிவுகளாக பிரித்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.
- சாலை கட்டமைப்பு, அதன் விதி முறைகள், சாலைக் குறியீடுகள் ஆகியவை குறித்து பொது மக்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லாததால் அதிக விபத்துகளும் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன.
- எனவே, சாலை பாதுகாப்பை மக்கள் இயக்கமாக மாற்றவும், விபத்தில்லா தமிழகத்தை உருவாக்கவும், பொது மக்கள் சாலைகளை சரியான வகையில் பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்த கையேட்டை சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்.
- இதில், வாகன வேகத்தின் தாக்கம், உலக சுகாதார நிறுவனம், சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் சாலை விபத்து தொடர்பான புள்ளி விவரங்கள், விபத்துக்கான காரணங்கள், அதை தவிர்க்கும் வழி முறைகள், சாலை விதிகள், பயணத்தில் கட்டாயம் பின்பற்ற வேண்டிய விதி முறைகள், எச்சரிக்கை குறியீடுகள், வாகன பராமரிப்பு, முதலுதவி சேவை பற்றிய விளக்கங்கள் மற்றும் உதவி எண்கள் உள்ளிட்ட விவரங்கள் இடம் பெற்றுள்ளன.

**காலணி, தோல் பொருட்களுக்கு புதிய கொள்கை வெளியீடு - ரூ. 2,250 கோடி முதலீட்டு திட்டங்களுக்கு ஒப்பந்தம்:**

- தமிழக தொழில் துறை சார்பில் காலணிகள் மற்றும் தோல் துறை மாநாடு சென்னையில் நடைபெற்றது.
- இதில், முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் ரூ. 2,250 கோடி முதலீட்டில் 5 முதலீட்டுத் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- தொடர்ந்து, காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கையை முதல்வர் ஸ்டாலின் வெளியிட, அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, தா.மோ. அன்பரசன் பெற்றுக் கொண்டனர்.

- கோத்தாரி - பீனிக்ஸ் அக்கார்டு நிறுவனம் சார்பில் காலணி உற்பத்திக்காக ரூ. 1,200 கோடி முதலீடு, ஆயத்த நிலை மாதிரி சூழலமைப்புக்காக ரூ.500 கோடி முதலீடு, கோத்தாரி - எஸ் இ எம் எஸ் குழுமம் சார்பில் தோல் அல்லாத காலணி உற்பத்திக்காக ரூ.300 கோடி முதலீடு ஆகியவற்றுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- இது தவிர, வேகன் குழுமம் சார்பில் தோல் அணிகலன் மற்றும் பரிசு அணிகலன்களின் உபகரணங்கள் உற்பத்திக்கு ரூ.150 கோடி முதலீடு, வாக்கரூ நிறுவனம் சார்பில் தோல் அல்லாத காலணி உற்பத்தியில் ரூ.100 கோடி முதலீட்டுக்கான ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது.

**ஒண்டிவீ ரன் நினைவு அஞ்சல் தலை ஆகஸ்ட் 20 - இல் வெளியீடு: நடுவணரசு தகவல்**

- விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரனின் நினைவு அஞ்சல் தலை ஆகஸ்ட் 20 -ஆம் தேதி திருநெல்வேலியில் வெளியிடப்படுவதாக நடுவணரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மாவீரன் பூலித் தேவனின் படைத் தளபதியாக விளங்கி, ஆங்கிலேயரை எதிர்த்து போர் புரிந்தவர் மாவீரன் ஒண்டி வீரன்.
- தமிழ் நாட்டில் கிளர்ந்தெழுந்த முதல் இந்திய விடுதலைப் போரின் தளபதிகளில் ஒருவராக திகழ்ந்த மாவீரன் இவர்.
- ஒரு கையை இழந்த பிறகும் நம்பிக்கையை இழக்காமல் இறுதி வரை களம் நின்று ஆங்கிலேய படைகளை தனியாகச் சென்று அழித்தார் என்றும் அதனால் அவர் ஒண்டிவீரன் எனவும் அழைக்கப்பட்டார்.
- ஒண்டி வீரனின் 251 - ஆவது நினைவு நாள் ஆகஸ்ட் 20 - ஆம் தேதி அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு அன்றைய நாள் அவரின் நினைவு அஞ்சல் தலை வெளியிடப்படும் என நடுவணரசின் அஞ்சல் துறை அறிவித்துள்ளது.

**எல்.ஜி.பி.டி. பிரிவினரை இனி இப்படித் தான் அழைக்க வேண்டும் - தமிழக அரசு வெளியிட்ட சொல்லகராதி. LGBTQIA + (எல்.ஜி.பி.டி. க்யூ.ஐ. ஏ ப்ள ஸ்):**

- சமுதாயத்தினரின் உரிமைகள் பாதுகாப்பு, ஊடகங்களில் இப்பிரிவினரை குறிப்பிடுவது தொடர்பான சொல்லகராதியை தயாரிப்பது தொடர்பான வழக்கு, நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன் விசாரணையில் உள்ளது.
- எல்.ஜி.பி.டி. க்யூ.ஐ. ஏ ப்ளஸ் சமுதாயத்தினரை குறிப்பிடும் சொல்லகராதியை நான்கு வாரங்களில் வெளியிட வேண்டும் என தமிழக அரசுக்கு, சென்னை உயர் நீதிமன்றம், கடந்த ஜூலை 25 ல் உத்தரவு பிறப்பித்திருந்தது.

- தன் பாலீர்ப்பு ஆண் (gay), தன் பாலீர்ப்பு பெண் (lesbian) என்றும், இரு பாலீர்ப்புடைய நபர் (bi sexual) என்றோ அழைக்கலாம் எனவும், பால் புதுமையர் (queer) என அழைக்க வேண்டும் என அரசு அறிவிப்பாணையில் கூறப்பட்டுள்ளது.
- இதை பதிவு செய்த நீதிபதி, எல்.ஜி.பி.டி. பிரிவினரை குறிப்பிட, இந்த சொற்களையே பயன்படுத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

**46 பேருக்கு தேசிய நல்லாசிரியர் விருது:**

- இந்திய முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் பிறந்த நாளான செப்டம்பர் 5 ம் தேதி ஆசிரியர் தினமாக கொண்டாடி வருகிறோம்.
- இந்த நாளில் தேசிய அளவில் மற்றும் மாநில அளவில் சிறப்பாக பணியாற்றிய ஆசிரியர்கள் நல்லாசிரியர் விருதுகள் வழங்கி கவுரவிக்கப்படுகின்றனர்.
- தேசிய நல்லாசிரியர் விருதுகளை ஒவ்வொரு ஆண்டும் டெல்லியில் ஜனாதிபதி வழங்குவார். இந்நிலையில் 2022 ம் ஆண்டுக்கான தமிழகத்தின் ராமநாதபுரம் மாவட்டம் கீழாம்பல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆசிரியர் ராமச்சந்திரன், புதுச்சேரி முதலியார் பேட்டை அரசு மேனிலைப் பள்ளி ஆசிரியர் அரவிந்த் ராஜா, ஆகியோரும் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- தேசிய நல்லாசிரியர் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களுக்கு செப்டம்பர் 5 ம் தேதி டெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் நடக்கும் விழாவில், ஜனாதிபதி விருதுகளை வழங்குவார்.
- இந்த விருது பெறுவோருக்கு பாராட்டு சான்றும், ரொக்கத் தொகை ரூ.50 ஆயிரம், வெள்ளி பதக்கம் ஒன்றும் வழங்கப்படும்.

**இந்தியாவின் அவுட் லுக் டிராவலர் 2022 விருதை தட்டிச் சென்ற தமிழ் நாடு:**

- தமிழ் நாட்டிற்கான வெள்ளி விருதினை, மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் கிஷன் ரெட்டி வழங்கினார்.
- இந்த விருது வழங்கும் விழா டெல்லியில் நடைபெற்ற நிலையில், தமிழ் நாடு அரசு சார்பில் சுற்றுலாத் துறை முதன்மை செயலாளர் சந்திர மோகன், சுற்றுலாத் துறை இயக்குனர் சந்தீப் நந்தூரி ஆகியோர் பங்கேற்றனர்.



- அவுட் லுக் விருதுகள் பயண மற்றும் சுற்றுலாத் துறையில் தரத்தின் அளவு கோலை குறிக்கின்றன மற்றும் தொழில் துறையின் 360 டிகிரி பார்வையை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- பல ஆண்டுகளாக, இந்த விருதுகள் சுற்றுலாத் தொழில் முனைவோர்களை பல்வேறு கோணங்களில் ஈர்த்துள்ளது.
- சர்வதேச நோய் பரவலுக்குப் பின் சுற்றலாத் துறை சார்ந்த தொழில்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை முன்னிலைப்படுத்துவதில் இந்த ஆண்டு முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.
- சிறந்த சுற்றுச் சூழல் சுற்றுலாத் தலம், சிறந்த வன விலங்குத் கலம். சிறந்த சாகச தலம் மற்றும் சிறந்த விழாத் தலம் உள்ளிட்ட 11 வெவ்வேறு பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டன.
- இந்திய சுற்றுலாத் துறையை சேர்ந்த முக்கிய நபர்களைக் கொண்டு விருதுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- இந்த நிகழ்வில் சுற்றுலாத் துறையில் ஸ்டார்ட் அப்கள் மற்றும் இலக்குகளைச் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல் தொடர்பான குழு விவாதங்களும் நடைபெற்றன.

**சபா நாயகர்களுக்கான 65 வது காமன் வெல்த் மாநாடு**:

- கனடாவில் உள்ள ஹாலிஃபாக்ஸ் நகரத்தில் சபாநாயகர்களுக்கான 65 வது காமன் வெல்த் மாநாடு நடைபெற்று வருகிறது.
- இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளின் சபாநாயகர்கள் பங்கு பெற்றுள்ளனர்.
- இந்தியாவில் இருந்து லோக் சபா சபாநாயகர் ஓம் பிர்லா மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த சபாநாயகர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர்.
- தமிழக சட்டப் பேரவை சபாநாயகர் அப்பாவு இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளார்.
- காமன் வெல்த் மாநாடு நடைபெற்ற வளாகத்திற்கு லோக் சபா சபாநாயகர் ஓம் பிர்லா தலைமையில் சபா நாயகர்கள் கையில் தேசியக் கொடி ஏந்திய வண்ணம் பேரணியாக வந்தனர்.

**பாரத சாரண சாரணியர் இயக்க தலைவராக அமைச்சர் மகேஷ் பொய்யா மொழி தேர்வு**:

- சாரண சாரணியர் இயக்கம் என்பது எப்போதும் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும்.
- அதன் படி தலைவர், துணைத் தலைவர், மாநில ஆணையர் பதவிகளுக்கு ஆகஸ்ட் 17 ம் தேதி முதல் 22 ம் தேதி வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

- இறுதி வேட்பாளர் பட்டியல் 26 ம் தேதி வெளியானது. இந்த தேர்தலில் மாநில தலைவர் பதவிக்கு யாரும் போட்டியிடாததால், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மகேஷ் பொய்யா மொழி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- பள்ளி கல்வி துறை ஆணையர் பாரத சாரணர் சாரணியர் இயக்க மாநில ஆணையராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- துணைத் தலைவர்களாக பள்ளிக் கல்வி துறை இயக்குனர் கண்ணப்பன், பெரியண்ணன், விவேகானந்தன், மகேந்திரன், எத்திராஜுலு, நாராயணசாமி, லட்சுமி, சுகன்யா, அமுத வள்ளி, கஸ்தூரி சுதாகர், பாக்கியலட்சுமி தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி. ரமணா ஓய்வு - வழக்கு விசாரணைகள் நேரலையாக ஒளிபரப்பு:**

- உச்ச நீதிமன்றத்தின் 48 - வது தலைமை நீதிபதியான என்.வி. ரமணா பணி ஓய்வு பெறுகிறார்.
- உச்ச நீதிமன்றத்தில் இதுவரை இல்லாத வகையில் தலைமை நீதிபதி என்.வி. ரமணாவை சிறப்பிக்கும் வகையில் முதல் முறையாக அவரது தலைமையிலான பெஞ்ச் விசாரிக்கும் வழக்குகள் நேரலையாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.
- உச்ச நீதிமன்றத்தின் 71 ஆண்டு கால வரலாற்றில் முதல் முறையாக வழக்கு
- விசாரணைகள் நேரலையாக ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன.

**உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.752 கோடி நிதி ஒதுக்கி அரசாணை வெளியீடு:**

- தமிழ் நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்காக அடிப்படை மானியமாக மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் படி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.
- பட்ஜெட்டில் நடப்பு ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 5,080 கோடி ரூபாயில் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்கு மட்டும் 752 கோடி ரூபாய் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது.
- கிராம ஊராட்சிகளுக்கு 424 கோடி ரூபாயும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு 270 கோடி ரூபாயும், மாவட்ட ஊராட்சிகளுக்கு 50 கோடி ரூபாயும் ஒதுக்கி தமிழ் நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.
- உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேவையான நிதி, தடையற்ற குடிநீர், மழைநீர் சேகரிப்பு திட்டங்கள் உள்ளிட்ட பல திட்டங்களுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின், மரணம் தொடர்பாக விசாரிக்க ஓய்வு பெற்ற நீதிபதி ஆறுமுக சாமி தலைமையில் 608 பக்க அறிக்கை மு.க. ஸ்டாலினிடம் ஒப்படைப்பு:**

- மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக விசாரிக்க ஓய்வு பெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில் 2017ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது.
- இந்த ஆணையம் மூன்று மாதத்திற்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டது. இந்த நிலையில், முதல் மூன்று மாதத்தில் ஆணையத்தால் அறிக்கை தாக்கல் செய்ய முடியவில்லை.
- இவ்வாறு நீதிபதி ஆறுமுக சாமி ஆணையத்துக்கு தொடர்ந்து 14 முறை கால அவகாசம் வழங்கப்பட்டது. தற்போது வரை இந்த ஆணையம் 158 பேரிடம் விசாரணை நடத்தியுள்ளது.
- இந்நிலையில் சனிக்கிழமை (ஆகஸ்ட் 27) காலை 10:40 மணிக்கு நீதிபதி ஆறுமுக சாமி தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தயார் செய்யப்பட்டுள்ள சுமார் 608 பக்கங்கள் கொண்ட இறுதி அறிக்கையை முதலமைச்சர் மு.க. ஸ்டாலினிடம் சமர்பித்தார்.

**அம்ருத் 2.0 திட்டம் - தமிழகத்தில் 187 நீர் நிலைகளை புனரமைக்க ரூ.113.74 கோடி ஒதுக்கீடு:**

- மத்திய அரசு புனரமைப்புக்கான அடல் இயக்கம் மற்றும் நகர்ப் புற மறுசீரமைப்பு 2.0 (அம்ருத் 2.0) திட்டத்தை செயல்படுத்த கடந்த ஆண்டு ஒப்புதல் அளித்தது. இதன் படி இந்த திட்டம் 2025 - 26 வரை செயல்படுத்தப்படவுள்ளது.
- இந்தத் திட்டத்தில் நகர்ப் புறங்களில் உள்ள வீடுகளுக்கு குறைந்த செலவில் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீர் சேவைகள் வழங்கப்படவுள்ளது.
- இந்தத் திட்டத்திற்கு ரூ.2 லட்சத்து 77,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 4,378 நகரங்களில் உள்ள வீடுகளுக்கு குழாய் வழி குடி நீர் இணைப்பு வழங்க அம்ருத் 2.0 - ல் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- 500 அம்ருத் நகரங்களில் வீடுகளில் 100 சதவீத கழிவு மேலாண்மையை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்நிலையில், அம்ருத் 2.0 திட்டத்தில் 14 மாநிலங்களில் மொத்தம் 690 நீர் நிலைகளை சீரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- இதில் அசாம் மாநிலத்தில் 30, சத்தீஸ்கர் மாநிலத்தில் 60, டெல்லியில் 38, குஜராத்தில் 123, லாடாக்கில் 1, மத்தியப் பிரதேசத்தில் 89, மகாராஷ்டிராவில் 77, மணிப்பூரில் 17, ஒடிசாவில் 16, புதுச்சேரியில் 3, ராஜஸ்தானில் 23, சிக்கிமில் 1, தமிழ் நாட்டில் 187, மேற்கு வங்கத்தில் 23 நீர் நிலைகளை புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இதில் அதிக பட்சமாக தமிழகத்தில் 187 நீர் நிலைகளை புனரமைப்பு செய்ய ரூ.113.74 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ் நாட்டில் உள்ள 5 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேசிய தர உறுதி சான்றிதழ்:**

- தமிழ் நாட்டில் உள்ள 5 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேசிய தர உறுதி சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.
- திருப்பூர் மாவட்டம் தளவாய் பட்டினம், திருப்பத்தூர் மாவட்டம் பாச்சூர், ராமநாதபுரம் மாவட்டம் வெங்கிட்டாங்குறிச்சி, தூத்துக்குடி மாவட்டம் மாப்பிள்ளையூரணி, கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தர உறுதி சான்று கிடைக்க பெற்றுள்ளது.

**முருகப்பா குழுமத்தின் 'மோன்ட்ரா ' 3 சக்கர மின் வாகனம்: ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்:**

- டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆப் இந்தியா (டிஐஐ), கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வரும், முருகப்பா குழுமத்தின் ஒரு அங்கமாகும்.
- நாட்டிலேயே சைக்கிள் உற்பத்தியில் இந்த நிறுவனம் முன்னோடியாக திகழ்கிறது.
- முருகப்பா குழுமத்தின் மற்றொரு நிறுவனமான டிஐ கிளீன் மொபிலிட்டி நிறுவனம், சுற்றுச் சூழலுக்கு மாசு விளைவிக்காத மின் வாகனங்களை தயாரிக்க திட்டமிட்டது.
- இதையடுத்து, அம்பத்தூரில் உள்ள டிஐ சைக்கிள்ஸ் வளாகத்தில், ரூ.140 கோடி முதலீட்டில் 580 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், மூன்று சக்கர மின் வாகனங்களை உற்பத்தி செய்ய முடிவு செய்யப்பட்டது.
- இதற்காக, கடந்த ஆண்டு ஜூலை 20 - ம் தேதி நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் தமிழக அரசின் வழிகாட்டி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது.

- அதன் அடிப்படையில் டிஜ கிளீன் மொபிலிட்டி நிறுவனத்தின் மோன்ட்ரா என்ற வணிகப் பெயரிடப்பட்ட 3 சக்கர மின் வாகனங்கள் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.
- புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்ட ஓராண்டிலேயே இந்த உற்பத்தி திட்டம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.
- சென்னை தலைமைச் செயலகத்தில் மோன்ட்ரா 3 சக்கர மின்வாகனத்தை முதல்வர் ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

**ஆன்லைன் ரம்மியை தடை செய்ய அவசர சட்டம் - முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் முடிவு:**

- தமிழக அமைச்சரவை கூட்டம், முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.
- இக்கூட்டத்தில் துரை முருகன், கே. என். நேரு உள்ளிட்ட அமைச்சர்கள், தலைமைச் செயலர் வெ. இறையன்பு, நிதித் துறை செயலர் நா. முருகானந்தம், உள் துறை செயலர் க. பணீந்திர ரெட்டி, பொதுத் துறை செயலர் டி. ஜெகந்நாதன், முதல்வரின் செயலர்கள் டி. உதய சந்திரன், உமா நாத், அனுஜார்ஜ் ஆகியோர் பங்கேற்றனர்.
- தமிழக அமைச்சரவை கூட்டத்தில் இரு முக்கிய விசாரணை ஆணையங்களின் அறிக்கைகள் முன் வைக்கப்பட்டன.
- தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலையை நிரந்தரமாக மூடக்கோரி கடந்த 2018 - ம் ஆண்டு மே 22 - ம் தேதி பேரணி நடத்திய மக்கள் மீது காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.
- இதற்கான காரணங்கள், சூழ்நிலைகள் குறித்தும், தூத்துக்குடியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நிகழ்ந்த பிந்தைய நிகழ்வுகள் குறித்தும் விசாரணை செய்வதற்காக நீதியரசர் அருணா ஜெகதீசன் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது.
- இந்த ஆணையத்தால் கடந்த மே 18 - ம் தேதி அரசுக்கு அறிக்கை அளிக்கப்பட்டது. அந்த அறிக்கை குறித்து அமைச்சரவை விரிவாக விவாதித்தது.
- ஐபிஎஸ் அதிகாரிகள் உள்ளிட்ட 17 காவல் துறையினர், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட 4 அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கான விசாரணை ஆணையத்தின் பரிந்துரைகள், சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு, அவை துறைகளின் பரிசீலனையில் உள்ளதை அமைச்சரவை கவனத்தில் கொண்டது.

- இது குறித்து சம்பந்தப்பட்ட துறைகள் தகுந்த நடவடிக்கை மேற்கொண்ட பின்னர், அதற்கான விவர அறிக்கையுடன், ஆணையத்தின் இறுதி அறிக்கையை சட்டப் பேரவையில் வைக்க அமைச்சரவை முடிவெடுத்துள்ளது.
- மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, கடந்த 2016 - ம் ஆண்டு செப்.22 ம் தேதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதற்கான சூழல்கள் குறித்தும், அதைத் தொடர்ந்து அதே ஆண்டு டிச.5 - ம் தேதி அவரது மரணம் வரையிலும் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் தொடர்பாகவும் விசாரணை செய்வதற்காக நீதியரசர் ஆறுமுக சாமி விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது.
- இந்த ஆணையத்தால் கடந்த ஆக.27 - ம் தேதி அரசுக்கு அளிக்கப்பட்ட அறிக்கையும் அமைச்சரவையின் முன் வைக்கப்பட்டது.
- இந்த அறிக்கை குறித்து அமைச்சரவை விரிவாக விவாதித்தது. விசாரணை ஆணையத்தின் அறிக்கையை அமைச்சரவை பரிசீலித்து, அதில் தெரிவிக்கப்பட்டுள்ள வி.கே. சசிகலா, சிவக் குமார், அப்போதைய சுகாதாரத் துறை அமைச்சர் சி. விஜய பாஸ்கர், அப்போதைய தலைமைச் செயலர் ராம மோகன் ராவ் உள்ளிட்டோர் மீது அரசு விசாரணைக்கு உத்தரவிட பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- அந்த பரிந்துரைகள் மீது சட்ட வல்லுநர்களின் ஆலோசனைகளை பெற்று உரிய நடவடிக்கை எடுக்கவும், அதன் பின், அதற்கான விவர அறிக்கையுடன், ஆணையத்தின் அறிக்கையை, பேரவையில் வைக்கவும் அமைச்சரவை முடிவெடுத்துள்ளது.
- தமிழகத்தில் ஆன்லைன் ரம்மி உள்ளிட்ட சில இணைய தள விளையாட்டுகளால் ஏற்படும் சமுதாயக் கேடுகள் குறித்தும் அது தொடர்பாக தடைச் சட்டம் கொண்டு வருவது குறித்தும் அமைச்சரவை கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.
- இத்தகைய தடைச் சட்டங்கள் குறித்து நீதிமன்றங்கள் தெரிவித்துள்ள கருத்துகளின் அடிப்படையிலும், பொது மக்கள் மற்றும் வல்லுநர்களிடம் இருந்து வரப் பெற்றுள்ள ஆலோசனைகளை கருத்தில் கொண்டும், இது போன்ற விளையாட்டுகளை தடை செய்வது குறித்த சட்ட வரைவை வகுப்பது குறித்தும், அதில் இடம் பெற வேண்டிய முக்கிய அம்சங்கள் குறித்தும் அமைச்சரவை கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.
- இந்த வகை விளையாட்டுகளை தடை செய்வதற்காக அவசரச் சட்டம் கொண்டு வரப்பட உள்ள விவரமும் அமைச்சரவை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

**'நான் முதல்வன்' திறன் மேம்பாட்டுத் திட்டம் - முதலமைச்சர் ஸ்டாலின் துவங்கி வைத்தார்:**

- தமிழ்நாடு முதலமைச்சர் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டுத் திட்டத்தினை சென்னை கலைவாணர் அரங்கில் துவங்கி வைத்தார்.
- கல்லூரி மாணவர்களுக்கான திறன்களை மேம்படுத்த 50 - க்கும் மேற்பட்ட தொழிற் நிறுவனங்களுடன், தமிழ் நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழக மாணவ மாணவியர்களின் தனித் திறமையை அடையாளம் கண்டு ஊக்குவிக்கும் நோக்கில் 'நான் முதல்வன்' திட்டத்தை தமிழ் நாடு முதலமைச்சர் கடந்த மார்ச் 1 ம் தேதி துவங்கி வைத்தார்.
- ஆண்டுக்கு, 10 லட்சம் தமிழ் நாட்டு இளைஞர்களைப் படிப்பில், சிந்தனையில், ஆற்றலில் மேம்படுத்துவது இட்த்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- இத்திட்டம், தமிழ் நாடு முதலமைச்சரின் நேரடி கண்காணிப்பில், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை திட்டத்தினை ஒருங்கிணைக்கும், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு இத்திட்டத்தினை செயல்படுத்தும்.
- திறன் மேம்பாட்டு, வழிகாட்டி ஆகிய இரண்டு கூறுகளை இத்திட்டம் கொண்டுள்ளது.
- 12 ம் வகுப்புக்குப் பிறகு என்ன படிக்கலாம்? எங்கு படிக்கலாம் என்று வழிகாட்டும் naanmudhalvan.tnschools.gov.in என்ற இணைய தளம் தொடங்கப்பட்டது. மேலும், துறை சார் நிபுணர்கள், வழிகாட்டிகள் மூலம் 12 ம் வகுப்பு மாணவர்களுக்கென இணைய வழி அமர்வுகள் பள்ளிகளில் நடைபெற்று வருகின்றன.

**மத்திய தர வரிசை பட்டியல் 46 வது இடத்தில் தமிழகம்:**

- தமிழக மின் வாரியம், மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், மின் தொடரமைப்பு கழகம் ஆகிய நிறுவனங்களாக செயல்படுகிறது.
- அதில் மின் உற்பத்தி மற்றும் பகிர்மானம், 3.20 கோடி மின் இணைப்புகளுக்கும் வினியோகம் செய்யும் பணியை மேற்கொள்கிறது.
- மத்திய மின் துறை, நாடு முழுதும் செயல்படும், 52 அரசு துறை மின் வினியோக நிறுவனங்களின் நிதி நிலைமை, மின் வினியோக செயல்பாடு போன்றவற்றை ஆராய்ந்து, ஆண்டு தோறும் தர வரிசை பட்டியல் வெளியிடுகிறது.
- கடந்த, 2019 - 20 ல் வெளியிட்ட பட்டியலில், தமிழக மின் வாரியம், 40 வது இடத்தை பிடித்திருந்தது.

- தற்போது, 2020 - 21 ம் நிதியாண்டிற்கான பட்டியலில் 'சிமைனஸ் கிரேடு' உடன், 46 வது இடத்தை பிடித்துள்ளது.
- அந்த ஆண்டில் மின் வாரியம், 49 ஆயிரத்து, 785 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ள நிலையில், 13 ஆயிரத்து, 407 கோடி ரூபாய் இழப்பை சந்தித்துள்ளது.
- ஒரு யூனிட் மின்சார விற்பனைக்கும், அதனால் கிடைக்கும் வருவாய்க்கும் உள்ள இடைவெளி, 2 ரூபாய் என்ற அளவில் உள்ளது.
- மின் கொள் முதல் போன்றவற்றுக்கு அதிக செலவு செய்வதே தர வரிசை பட்டியலில் மிகவும் மோசமான நிலையில் இருப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.
- தர வரிசை பட்டியலில், குஜராத்தை சேர்ந்த நான்கு மின் வினியோக நிறுவனங்கள் முதலாவது, இரண்டாவது, நான்காவது, ஐந்தாவது இடத்தில் உள்ளன.

**தற்கொலையில் மகாராஷ்டிரா முதலிடம், தமிழ் நாடு இரண்டாவது இடம்:**

- என்.சி. ஆர். பி அறிக்கையின் படி, தொழில் சார்ந்த பிரச்சனைகள், தனிமை உணர்வு, துஷ்பிரயோகம், வன்முறை, குடும்ப பிரச்சனைகள், மன நல கோளாறுகள், மதுவுக்கு அடிமையாதல், நிதி இழப்பு மற்றும் நாள்பட்ட வலி ஆகியவை நாட்டில் தற்கொலை சம்பவங்களுக்கு முக்கிய காரணங்களாகும்.
- 2021 ஆம் ஆண்டில், இந்தியா முழுவதும் இது போன்ற 1,64,033 வழக்குகளைக் கண்ட மகாராஷ்டிரா அனைத்து இந்திய மாநிலங்களிலும் அதிக எண்ணிக்கையிலான தற்கொலைகளைப் பதிவு செய்துள்ளது, அதைத் தொடர்ந்து தமிழ் நாடு மற்றும் மத்தியப் பிரதேசம் பெரும்பாலான தற்கொலைகள் மகாராஷ்டிராவில் (22,207) பதிவாகியுள்ளன, அதைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் 18,925 தற்கொலைகள், மத்தியப் பிரதேசத்தில் 14,965 தற்கொலைகள், மேற்கு வங்கத்தில் 13,500 மற்றும் கர்நாடகாவில் 13,056 என்று அறிக்கை கூறுகிறது.

**பல்கலைக் கழக துணை வேந்தர்கள் மாநாட்டை தொடங்கி வைத்தார் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்:**

- சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் துணை வேந்தர்கள் மாநாடு நடைபெற்றது. இதனை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- மாநாட்டில் மாநில அரசின் கட்டுப்பாட்டில் வரும் 22 பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்கள், அமைச்சர்கள் பொன் முடி, மா. சுப்பிரமணியன், அனிதா ராதா கிருஷ்ணன், தங்கம் தென்னரசு, ரகுபதி, எம். ஆர்.கே. பன்னீர் செல்வம், மெய்ய நாதன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

- நான் முதல்வன் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல், உயர் கல்வி நிறுவனங்களுக்கான தர வரிசையில் சிறந்த இடத்தைப் பிடிப்பது, பாடத் திட்ட மாற்றம், மாநில கல்விக் கொள்கையில் இடம் பெற வேண்டிய அம்சங்கள், புதுமைப் பெண் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளில் கவனம் செலுத்துதல், பேராசிரியர்கள் - மாணவர்கள் விகிதத்தை சரியாக கடைபிடித்தல் உள்ளிட்டவை குறித்து மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.
- நம்முடைய மாணவர்களின் ஆராய்ச்சி திறமையை மேம்படுத்தவும், புதிய கண்டுபிடிப்புகளை தமிழ் நாட்டில் ஊக்கப்படுத்தவும் "CM Research Fellowship" "முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகை" திட்டம் தொடங்கப்படும்.
- இதற்கான மாநில அளவில் தகுதித் தேர்வு நடத்தப்பட்டு மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.




- தொழில் துறையில் ஏற்பட்டு வரும் நவீன மாற்றங்களுக்கு ஏற்ப ஆசிரியர்கள், மாணவர்களுக்கு உரிய திறன் சார்ந்த பயிற்சி வழங்க ஏதுவாக தொழில் நிறுவனங்களுடன் இணைந்து "ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி " (Faculty Development Programme) வழங்கப்படும்.

**கிராம உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு நிதி விடுவிப்பு - தமிழகத்திற்கு ரூ.1380 கோடி:**

- மாநிலங்களுக்கு கிராமப் புற ஊராட்சி அமைப்புகளுக்கான நிதியை மத்திய அரசு ரூ.15075 கோடியை விடுவித்துள்ளது.
- தமிழகத்திற்கான பங்காக ரூ.1380 கோடி வரையில் மத்திய அரசு ஒதுக்கி உள்ளது.
- மேலும் பல்வேறு மாநிலங்களுக்கும் இது போன்று நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது.
- இதன் படி உ.பி., க்கு ரூ. 3,733கோடி, ம.பி., ரூ. 1,472 கோடி, ரூ. குஜராத்திற்கு 1,1181 கோடி என மத்திய அரசு நிதி ஒதுக்கி உள்ளது.

**தமிழக, புதுவை ஆசிரியர்களுக்கு தேசிய நல்லாசிரியர் விருது:**

- நிகழாண்டுக்கான தேசிய நல்லாசிரியர் விருது பெறும் 46 பேர் கொண்ட பட்டியலில், தமிழ் நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தொடக்கப்பள்ளி ஆசிரியர் கே ராமச்சந்திரன், புதுவையைச் சேர்ந்த அரவிந்த் ராஜா ஆகியோர் இடம் பெற்றுள்ளார்.

- மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் இராதா கிருஷ்ணனின் பிறந்த நாளான செப்.5 - ஆம் தேதி ஆண்டு தோறும் ஆசிரியர் நாளாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.
- இந்த நாளில் சிறந்த ஆசிரியர்களுக்கு நடுவணரசு சார்பில் தேசிய நல்லாசிரியர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படும்.
- இந்த விருது 150,000 ரொக்கம், பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை உள்ளடக்கியது.

**ஊராட்சிகளுக்கு 751 கோடி மானியம் தமிழ் நாடு அரசு உத்தரவு:**

- ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியமாக ₹751.99 கோடியை விடுவித்து தமிழ் நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கான உத்தரவை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வெளியிட்டுள்ளது. அவ்வுத்தரவு விவரம்:
- ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் படி, மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் இருந்து 10% உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்படுகிறது.
- இதில், கிராமப் புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 56 சதவீதமும், நகர்ப் புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 44 சதவீதமும் நிதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்கான மாநில நிதி ஆணையத்தின் மானியங்கள் கிராமப் புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படவுள்ளன.

**வெம்பக் கோட்டை அகழாய்வில் சுடு மண்ணாலான கற்கால மண் பானைகள் கண்டெடுப்பு:**

- வெம்பக் கோட்டையில் நடந்து வரும் அகழாய்வில் சுடு மண்ணாலான கற்கால பானைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- விருது நகர் மாவட்டம் சாத்தூர் அருகே வெம்பக் கோட்டையில் உள்ள வைப்பாற்றங்கரை விஜய கரிசல் குளம் ஊராட்சிக்குள்பட்ட வட கரை உச்சி மேட்டில் 25 ஏக்கர் பரப்பளவிலான தொல்லியல் மேட்டில் கடந்த மார்ச்.16 ஆம் தேதி முதல் அகழ்வாராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- இந்த அகழாய்வில் சுடு மண்ணாலான பகடைக்காய், தக்கலி, ஆட்டக்காய்கள், முத்து மணிகள், சங்கு வளையல்கள், பெண்ணுருவம், காளை உருவம், விளையாட்டுப்பொருள்கள், கோடரி, தங்க அணிகலன்கள் உள்ளிட்டவை கண்டறியப்பட்டுள்ளன.

**செப். 5 - இல் தமிழக அரசின் 3 கல்வித் திட்டங்கள் தொடக்க விழா:**

- சென்னையில், புதுமைப் பெண், தகை சால் பள்ளிகள், மாதிரிப் பள்ளிகள் ஆகிய மூன்று திட்டங்களுக்கான தொடக்க விழா (செப்.5) நடைபெறவுள்ளது.
- அவற்றின் விவரம்:

- 1. தமிழக அரசு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர் கல்வி உறுதித் திட்டத்தின் கீழ், அரசுப் பள்ளியில் படித்த அனைத்து மாணவிகளுக்கும் உயர் கல்வி உதவித் தொகையாக மாதம் ₹1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம்.
- 2. சிறந்த பள்ளிகள் - தில்லியைப் போலவே, தமிழக அரசும் மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் அதி நவீன 26 தகை சால் பள்ளிகளை அறிமுகப்படுத்துகிறது.
- தொலை நோக்குப் பார்வையுடன் வலுவான அடித் தளத்தையும், கற்றலின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் மேம்படுத்தப்பட்டதாக இப்பள்ளிகள் அமைக்கப்படுகின்றன.
- 3. தமிழகத்தில் ஏற்கெனவே கடந்த 2021 அக்டோபர் மாதம் தொழிற் முறை படிப்புகளை வழங்கும் 10 ஸ்டெம் (விஞ்ஞானம், தொழில் நுட்பம், பொறியியல், கலை, மருத்துவம்) மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- மேலும் 15 இடங்களில் ₹125 கோடியில் இந்த மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்படுகின்றன.




Adda247 தமிழ்














தமிழ் adda247
வெற்றி வாராந்திர நடப்பு
நிகழ்வுகள் PDF தமிழில்
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


தமிழ் adda247
DAILY QUIZ
in Tamil
for TNPSC, UPSC, IBPS, RRB,
SSC, IBPS RRB, IB, BIS,SBI, ETC.


தமிழ் adda247
DAILY CURRENT
AFFAIRS IN TAMIL
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


தமிழ் adda247
BEST ARTICLES IN TAMIL
FOR EXAM PREPARATION
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB etc.
ARTICLE


தமிழ் adda247
DOWNLOAD
Admit Card


தமிழ் adda247
ARTICLES
IN TAMIL